ரிஜிஸ்டர் நெ. 1279 | போஸ்ட் பாக்ஸ் நெ. [illegible]3 | டெலிபோன்-நெ. 2583

திராவிடன்

[மலர் 13 | ஆசிரியர் சனக சங்கர கண்ணப்பர் | திங்கட்கிழமை 1929 பிப்ரவரி 18உ | இதழ் 334]

சுயமரியாதை மகாநாடு

இந்தியாவில், இதுவரையிலும் நடைபெற்றிராத ஓர் ஒப்பற்ற வைபவத்தை, வர்ணிப்பதற்கு இவ்வேடுகள் இடந்தாரா வெனினும், சில முக்கிய விஷயங்களைப் பற்றி அவசியம் இயன்றவரையிற் கூறும்படி நேரிடுகின்றது. இவ்வைபவம் இத்தென்னிந்தியாவில் நடைபெற்றதெனினும் இந்தியாவிலேயேமிக்கப்பெரிதெனவும், மாக்ஷிமை பொருந்தியதெனவும், ஒப்பற்றதெனவும், மகாநாட்டிற்கு விஜயம் செய்திருந்தார் அனைவரும் மதிக்காமலிருந்திருக்க முடியாது. இந்நாட்டில் எவ்வளவோ மகாநாடுகள், எவ்வளவோ கூட்டங்கள், எவ்வளவோ திருவிழாக்கள் எவ்வளவோ, காங்கிரஸ்கள், எவ்வளவோ வைபவங்கள்நடைப்பெற்றிருக்ககண்டிருக்கலாம். கேள்வியுற்றிருக்கலாம். சுயநலத்தை முன்னிட்டு அளவிற்கு மீறிப் புகழப்பெற்றிருக்கலாம். எவை எப்படியாக நடைபெற்றதெனினும், செங்கற்பட்டில் நடந்த சுயமரியாதை மகாநாட்டினை எவ்வகையானும் அவைகள் ஒப்புற்றுக் கூறப்பெறுவதற்கந்தஸ்தை யடைந்தன வன்றே என்று கூறலாம்.

[illegible]

டாக்டர் நாயர் மாளிகை

மகாநாட்டுப் பந்தல்

[illegible]

விசேடச் சிறப்பு

[illegible]

சுயமரியாதை மாகாண மகா நாடு.

லக்ஷக்கணக்கான ஜனங்கள்

பதினாயிரக்கணக்கான பிரதிநிதிகள்

தலைவர் ஊர்வலக் கோலம்

சென்னை செங்கற்பட்டு ராஜோசிதச் சிறப்பு

வரவேற்புகளும் வளைவுகளும்

டாக்டர் நாயர் மாளிகைக் காக்ஷி

மகாநாட்டு வைபவம்.

ரே புதுக்கப்பெற்ற சலவைக்கற்களால் கட்டப்பெற்ற மாளிகை போன்றே தோற்றியதே தவிர கீற்றுகளால் நிறுவப் பெற்ற கொட்டகையென யாரேனும் துணியவில்லை யென்பது திண்ணம். பந்தரின் முன்னிலையில் மாபெருந் தலைவர் பார்ப்பனரல்லாதார்க்குத் தந்தைபோன்றவர், தொழிலாளர்களின் வள்ளல், இந்தியாவில்ஒப்பற்றதேசியத்திலகர் சர். பி. டி. தியாகராயப் பெருமான் உயிர் பெற்று நின்ற தெனத் திகழ்ந்தார். இவரதின் உருவச்சிலையைக் கண்டு, பிரதிநிதிகளிற் பலர் கையெடுத்துத் தெய்வமெனத் தொழுதார்கள் எனின், அது சமயம் இச்சிலையால் பார்ப்பனரல்லாத மக்களிடை ஏற்பட்ட உள்ளக் கிளர்ச்சியை யார்தான் எடுத்துரைக்கக்கூடும். நாயர் மாளிகைக்குள் நுழையும் முன்னணியில், தலைவர் தியாகராயரின் உருவச்சிலை நின்று, விஜயம் செய்பவர்களனைவருக்கும் ஓர் பயபக்தியை விளைத்தது.

இம்மாநாட்டின் மாபெரும் பந்தரை வர்ணிப்பதற்கெளிதன்று. அப்பொழுது தான் நிறுவப் பெற்ற மாளிகையெனத் திகழ்ந்த [illegible] இப்பந்தரின் மேற்தோன்றிய சிகரங்களும், முன் விளங்கிய வாசற்கால்களும் இதனைக் கொட்டகை யல்லவென்று மயக்கிய சாக்ஷியை வலியுறுத்தியனவேதவிர வேறன்று. சுற்றிலும் மின்சார விளக்குகள் சித்தமாக இருந்தன. உள்நுழைந்ததும் புதுமணல் பரப்பிய தரையின்மீது விசித்திரக் கம்பளங்கள் விரிக்கப் பெற்று விளங்கின. பிரதிநிதிகட் கென்று இருபாகங்களும் அமைக்கப்பெற்றிருந்தன. ஆயிரக்கணக்கான ஸ்திரீகள் இம்மாநாட்டிற்கு விஜயம் செய்திருந்தாராதலின் ஸ்திரீகட்கென்று விசேடவசதி தலைவர்களின் மேடைக் கருகாமையில் அளிக்கப் பெற்றிருந்தது. இவைகளையெல்லாம் கடந்து சென்றதும் 4 அடிகட்குமேல் உயர்த்தப் பெற்ற தலைவர்கள் மேடை காணப்பெற்றது. மேடையானது ஆங்கில எழுத்து 'டி' என்பதின் சிற்ப அமைப்பை ஒத்திருந்தது. இந்த 'டி'யின் கால் பாகத்தில் அதாவது மேடையின் முன்பாகத்தின் இடப்புறத்தில் வலுக்கச்சொல்லும்ஒலிக்கருவியென்றமைக்கப் பெற்றிருந்தது. இக்கருவியின் அருகாமையில் இருந்து தான் தலைவர்களனைவரும் சொற்பொழிவாற்றினார்கள். இக்கருவியின் பாகங்களாகிய கிராமபோன் குழாய்களைப் போன்ற இரு குழாய்கள் கொட்டகையின் நடுவில் இருக்கைக்கு மேலே வலப்புறமொன்றும் இடப்புறமொன்றும் விளங்கா நின்றன. கொட்டகையின் மேற்பாகத்தில் சிறிதும் கீற்றுகள் தோற்றுவண்ணம், சல்லாச்சலவைத் துணிகளால் மூடப்பெற்றிருந்தன. எங்கு பார்க்கினும் வாந்தர்களும், குளோப்புகளும், விசித்திரக்காகித வெட்டுகளும், மனதிற்குஉற்சாகத்தை விளைத்தன. அழகிய காஸ் லைட்டுகள் வரிசையாக சிறுதே விட்டுவிட்டு பலசரங்களாகவிளங்கினமையால், கொட்டகை யெங்கும் இராக்காலத்தில் ஆயிரக்கணக்கான சந்திரர்கள் வானத்திற் பூத்தனபோன்று தோற்றின. பகற்போது தோன்றிய காக்ஷியினும் மாலைக்காக்ஷி பன்மடங்கு ஒவ்வொருவர் மனதையும் கவர்ந்து நின்றது. மேலும் திராவிடன் வீதி, குடியரசு வீதி, ஜஸ்டிஸ் வீதி, ரிவோல்டு வீதி முதலிய வீதிகளும், கண்காக்ஷிகளும், மற்றைய வைசிஷ வைபவங்களும் இம்மண்ணுலகத்தில் மானிடர் இதுகாறும் காணாத காக்ஷியாய் சிறந்து நின்றதெனின் இக்காக்ஷியின் உயர்ந்த அபூர்வ இறும்பூ தெய்தத்தக்க சிறப்பையாரே வர்ணிப்பது?

வழி நெடுக வரவேற்பு

ஊர்வலத்திற்கு வழி நெடுக வரவேற்பளிக்கப்பட்டதுடன் ஆங்காங்கு மந்திரிகளுக்கும் தலைவர்கள் ஈ. வெ. ராமசாமி நாயக்கர், சௌந்தர பாண்டிய நாடார், ஏ. ராமசாமி முதலியார் முதலானவர்களுக்கும் மாலைகள் போட்டு மக்கள்மகிழ்ந்தனர். ஊர்வலம் சைதாப்பேட்டையைக் கடந்து ஆலந்தூரையணுகி வரும்போது குறுக்கு வழியில் அமைக்கப்பட்டிருந்த செங்கல்பட்டு ஜில்லா போர்டு கமான் வளைவருகில் ஜில்லா போர்டு சிப்பந்திகளால் ஆடம்பரமான வரவேற்பளிக்கப்பட்டது. அங்கு சைதாப்பேட்டை தாலூகாபோர்டு தலைவர் சீமான் டி. ஷண்முக பிள்ளை ஜில்லா போர்டு மெம்பர் இலஞ்சியம் முதலியார் ஆலந்தூர் பாலகிருஷ்ண ரெட்டியார் செம்பியம் சுஜத் உசேன் சாகிப், பூந்தமல்லி பி. மாசிலாமணி முதலியார், சைதாப்பேட்டை தாலூகாபோர்டு மெம்பர் பட்டு முதலியார், சைதாப்பேட்டை பொன்னுசாமி முதலியார், இம்பீரியல் பாங்கியைச் சேர்ந்த ரத்னவேலு முதலியார், ராஜா பாதர் முதலியார், ஷண்முக முதலியார் சைதாப்பேட்டை உதவி எஞ்சினீயர் கிருஷ்ணசாமி ஐயங்கார், ஜீ. ரத்னம் பிள்ளை, ஜில்லாபோர்டு காரியதரிசி எஸ். ஜி. கோபால் நாயுடு வீ. எஸ். கிருஷ்ணசாமி [illegible], திரு [illegible], தியாகப்பிள்ளை, பாஷ்யம் நாயுடு, [illegible] முதலியார் முதலானவர்களும் திரளான கிராமவாசிகளும் கூடியிருந்தனர். ஊர்வலம் அங்கு வந்து சேர்ந்த உடனே ஜே! கோஷத்துடன், கனம் மந்திரிகள் டாக்டர் சுப்பராயன், சேது ரத்னம் ஐயர், முதலானவர்களையும் மற்ற தலைவர்களையும் வரவேற்று ஜில்லா போர்டு காரியதரிசி கோபால் நாயுடு மாலைகள் சூட்டினர்.

பின்னும் ஊர்வலத்திற்கு ஆலந்தூரிலும் ஆடம்பரமான வரவேற்பளிக்கப்பட்டு மந்திரிகளுக்கும் மற்றையோருக்கும் மாலைகள் சூட்டப்பட்டபின் ஊர்வலம் புறப்பட்டது. வழி நெடுக கிராம வாசிகளும் ஆண்களும் பெண்களும் கூட்டங் கூட்டமாக நின்றிருந்ததேசுயமரியாதை. இயக்கம் கிராம வாசிகள் மனதில் வேரூன்றி அவர்கள் தலைவர்களைத் தரிசிக்க ஆவலுடன் நெடுந்தூரத்திலிருந்து ஊர்வலம் செல்லும்பாதைகளில்வந்து குழுமியிருந்ததை நன்குவிளக்கியது.

பல்லாவரத்தில் பெரும் பந்தலமைக்கப்பட்டு ஊர்வலத்திற்காக ஆயிரக்கணக்கான ஜனங்கள் ஆவலுடன் காத்திருந்தனர். எறும்புக் கூட்டம்போல ஊர்வலத்தில் மோட்டார்கள் வருவதைக்கண்ட கிராம வாசிகளும் மற்றையோரும் அது என்றும் கண்டிராத காட்சி என வியந்து கொண்டாடினார்கள். ஊர்வலம் வரவேற்புப் பந்தலருகில் வந்ததும் கண்ட்ராக்டர் திரு. முனுசாமி ரெட்டியாரும் மற்றும் பல்லாவரம் வாசிகளில் அநேக பிரபலஸ்தர்களும்மூன்று மந்திரிகளையும் மற்றும் சுயமரியாதைத் தலைவர்கள் தொண்டர்கள் முதலியோரையும் வரவேற்று மாலைகள்சூட்டியபின் ஊர்வலத்தில் வந்த தலைவர்களுக்கும் மந்திரிகளுக்கும் மற்றவர்களுக்கும் [illegible] இளைப்பாறியபின் மீண்டும் ஊர்வலம் புறப்பட்டு விட்டது.

பின்னும் ஊர்வலத்தை இரும்பிலியூரிலும் வண்டலூரிலும் வரவேற்றுபசரிக்கப்பட்டதுடன் கூடுவாஞ்சேரியிலும் பந்தல்களும் கமான் வளைவுகளும் அமைக்கப்பட்டிருந்தன. ஆங்காங்கு ஜனங்கள் திரளாகக் கூடியிருந்து ஊர்வலத்தைக் கண்டதும் பெருத்த சந்தோஷ ஆரவாரம் செய்தனர். இவ்விடங்களிலெல்லாம் பிரபலஸ்தர்களால் மந்திரிகளுக்கும் மற்றவர்களுக்கும் வரவேற்பளிக்கப்பட்டு மாலைகள் சூட்டப்பட்டன. தலைவர்களுக்கு மாலைகள் தாங்க முடியாமற் போயிற்றென்றே சொல்லலாம். மாலைகள் மலைபோல் குவிந்துவிட்டன.

சிங்கப்பெருமாள் கோவிலில் அளிக்கப்பட்ட வரவேற்பு மறக்கக் கூடாததாயிருந்தது. வரவேற்புப் பந்தலருகில் சுமார் நூறு அடித்தூரத்திற்கு தப்பட்டை கொம்பு முதலிய புராதன வாத்தியங்களும் பின்னணியில் மேளம் பாண்டு வாத்தியங்களும் முழங்கின. ஜனங்கள் ஏராளமாகக் கூடியிருந்து தலைவர்களுக்கும் மந்திரிகளுக்கும் ஜில்லா போர்டு தலைவர் திரு. எம். கே. ரெட்டியாருக்கும், மகாநாட்டுத்தலைவர் சௌந்தர பாண்டிய நாடார் அவர்களுக்கும் வைக்கம் வீரர் திரு. ஈ. வெ. ராமசாமி நாயக்கர், கண்ணப்பர் முதலானவர்களுக்கும் மாலைகள் போடப்பட்டபோது பெருத்த சந்தோஷ ஆரவாரம் செய்தனர்.

முடிவாக ஊர்வலத்திற்காக செங்கல்பட்டு நகர ரயில் கேட்டுக்கு அருகாமையில் அமைக்கப்பட்ட பந்தலில் முனிஸிபல் சேர்மனும் மற்றும் அநேக பிரபலஸ்தர்களும் ஆயிரக்கணக்கான ஜனங்களும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர். ஊர்வலம் வந்து சேர்ந்ததும் வாத்தியமுழக்கத்துடன் மகா நாட்டுத் தலைவரையும் மந்திரிகளையும் மற்றும் ராமசாமி நாயக்கர் ராமசாமி முதலியார் முதலான தலைவர்களையும் வரவேற்று உபசரித்து மேலமையூர் மார்க்கமாக செங்கல்பட்டு நகரின் பல தெருக்கள் மூலமாயும் மகாநாட்டுப் பந்தலுக்கு ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். ஆங்கிருந்து சுமார் ஒரு மைல் தூரத்திற்கு எங்கும் ஒரே தலைகளாயும் பின்னால் சாரை சாரைகளாக மோட்டார்கள் சென்ற காட்சியும் காணபோர் பிரமிக்கச் செய்தது ஊர்வலம் மகாநாட்டுப்பந்தலுக்கு பகல் 11 மணிக்குத் தான் வந்து சேர்ந்தது. ஊர்வலம் வந்து சேர்ந்ததும் தலைவர்களுக்கும் மந்திரிகளுக்கும் ஆடம்பரமான வரவேற்பளிக்கப்பட்டு கொடியேற்ற விழா நடத்தப்பட்டது.

கொடியேற்ற விழா.

தலைவர்கள்ஊர்வலம் நாயர் மான்ஷனை யடைந்ததும் திரு. பி. டி. ராஜன் எம். எல். சி., அவர்களால் கொடியேற்றுவிழா நிகழ்த்தப்பட்டது.

தொடக்கத்தில் சிறுவர்களால் இனிய பாக்கள் பாடப்பட்டன. திருவாளர் எம். கே. ரெட்டியார் அவர்கள் கொடியின் நிறங்கள், உருவங்கள் முதலியவற்றின் பொருளை விளக்கி, திரு. பி. டி. ராஜன் அவர்களை மகாநாட்டுக் கொடியை ஏற்றும்படிக் கேட்டுக் கொண்டார்.

திரு. பி. டி. ராஜன் அரியதொரு உரை நிகழ்த்தி, கொடியைப் பலத்த கரகோஷத்தினிடையே ஏற்றினார். (இவ்விவரம் திராவிடனில் வெளியாகியிருக்கிறது.) பானகல் அரசருக்கு ஜே! பி. டி. ராஜனுக்கு ஜே! நாயருக்கு ஜே! இராமசாமி நாயக்கருக்கு ஜே! என்று ஆரவாரங்கள் ஒலித்தவண்ணமாகவேயிருந்தது. பிறகு தலைவர்களும் மற்றையோரும் வாத்திய முழக்கத்துடனும் ஜே கோஷத்துடனும், அதிர்வெடி வேட்டுகளுடனும் மகாநாட்டுப் பந்தலுக்கு வந்து சேர்ந்தனர்.

பிற்பகல் நிகழ்ச்சிகள்

விவசாயப் பொருட்காட்சி

பிற்பகல் 2-30 மணிக்கு விவசாயப் பொருட்காட்சியானது மந்திரிகனம் திரு முத்தையா முதலியாரால் திறந்து வைக்கப்பட்டது.

கனம் மந்திரி திறந்துவைத்துப் பேசுகையில் விவசாயமானது உயிர் வாழுவதற்கு மிகவும் இன்றியமையாததென்றும், எவ்வளவு பொருள் இருந்தாலும் விவசாயத்தொழில்நடவாது உயிர்வாழ்வு முடியாதென்றும், விவசாயம் சிறக்குமானால் ஒருவரும் பிறரிடத்து நாடவேண்டுவது வராதென்றும், விவசாயம் சிறக்குமானால்சுயமரியாதை ஒவ்வொருவருக்கும்வருமென்றும், தான் ஒருவிவசாயியென்றும், அதனைப்பற்றியே திரு. ஈ. வெ. இராமசாமி நாயக்கர் தன்னை விவசாய காட்சிச் சாலையைத் திறக்கும்படிக் கேட்டுக் கௌரவத்தை அளித்ததற்காக தான் அவருக்கும் மற்றும் புரிவதாகவும் கூறி அனைவருக்கும்வந்தனோனர்.

திரு. ஜே. எஸ். கண்ணப்பர் கனம் மந்திரிக்கு வந்தனை கூறினர். இத்துடன் விவசாயக் காட்சித் திறப்பு முடிவுற்றது.

கனம் மந்திரிகளுக்குப் பத்திரம்

பிற்பகல் 3 மணிக்கு சென்னை மந்திரிகள் மூவருக்கும் செங்கற்பட்டு முனிசிபல் சபையினர் முனிசிபல் பிரயாணிகள் தங்கும் பங்களாவில் பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது.

முதன் மந்திரி கனம் டாக்டர் சுப்பராயனுக்கு வாசித்துக் கொடுத்தப் பத்திரத்தில், முனிசிபல் ஆபீஸானது சொந்தக் கட்டிடமாகவில்லையென்றும், அக்கட்டிடம் குடிக்கூலியிட மென்றும், ஒரு

சிடி சினிமா கம்பெனி, லிமிடெட்.,

பாலெஸ் ஆப் வெரைட்டீஸ், தெற்கு மாசி வீதி, மதுரை.

சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் 3 ஆட்டம். மாலை 3, 6-30, இரவு 9-30-மணி.
மற்ற தினங்களில் " 2 ஆட்டம். மாலை 6-30, இரவு 9-30-மணி.

16-2-29-ம் சனிக்கிழமை முதல் ஒரு வாரம் மட்டும்.

உலகத்திற்கே பெரிய காக்ஷியானதும், கோரமான கடல் சண்டைகளும், 1,50,000 யுத்த வீரர்களின் திறமைகளும், சிறந்த குதிரைகளால் இழுக்கப்படும் ரதங்களின் ஓட்டமும், பயங்கரமான சர்க்கஸ் நிகழ்ச்சிகளும் நிறைந்துள்ளதுமான ரோமன் நேவாரோ, பெட்டி பிரான்ஸ், பிரான்சிஸ் புஷ்மேன் முதலியோர் நடித்த,

"பென்—ஹர்"
"பென்—ஹர்"
"பென்—ஹர்"

என்னும் 12 பெரிய பாகங்களடங்கிய காக்ஷி நடைபெறும்.

3 வருஷ காலமாய் 5 மில்லியன் டாலர்கள் செலவு செய்தும், 40 காமராக்களை உபயோகித்தும், இடிந்திருந்த ரோம—ஜெரூஜலம் நகரங்களைச் சீர்திருத்தம் பண்ணியும், வெகு பிரயாசையுடன் தயாரித்துள்ள உன்னதக் காக்ஷியை மறுமுறையும் காண்பரிது!

23-2-29 சனிக்கிழமை முதல் ஒரு வாரம் மட்டும்.

காமிக் அரசன் கண்ணாடிக்காரன், ஹாரோல்டு லாயிட் ஆக்ட் செய்த

"ஹெவன்ஸ் ஸேக்"

என்னும் அரிய காக்ஷி நடைபெறும்.

ஜெ. வி. இராஜகோபாலய்யா,
மானேஜிங் டைரெக்டர்.

(401)

ஸ்பார்ட்டன் & கோ., 25. பிராட்வே மதராஸ்.

பலவித எங்கிரேவிங் ரப்பர் ஸ்டாம்புகளும் விலை சரஸமாய்செய்யப்படும் வெளியூர் ஆர்டர்களை கவனிக்கப்படும். ரப்பர் ஸ்டாம்பு குஷன்செல்ப் இங்க்பாட் உள்பட ரூ. 2-8. வெள்ளி சீல் ரூ. [illegible] பித்தளை சீல் ரூ. 1-4 பியூன் பில்லைகள் ரூ. [illegible] பித்தளை விஸிட் போர்டு 12" X 4" ரூ. 5.

(403)

சொந்த இடம் முனிசிபல் ஆபீசுக்கு வேண்டியதால், அதற்கு அரசாங்கத்தார் பொருள் உதவி செய்ய வேண்டுமென்றும் குறிக்கப்பட்டிருந்தது.

சுகாதாரமந்திரி கனம் திரு. எஸ். முத்தையா முதலியார் அவர்களுக்கு அளிக்கப்பட்ட பத்திரத்தில், இதுபோது சர்க்கார் தண்ணீர் வசதிக்காக செங்கல்பட்டு வாசிகளுக்கு வரிப்போடப் போவதாகத் தெரிகின்றதென்றும், அவ்வாறு வரிபோடாது தகுந்த வழி கனம் மந்திரி தேட வேண்டுமென்றும், சாக்கடைத் திட்ட விஷயத்தில், அரசாங்கத்தார் ரூ. 40,000 செலவுத்திட்டமாக தீர்மானித்திருக்கின்றனரென்றும், அத்தொகைமிகவும் அதிகமானதென்றும், அச்செலவு திட்டத்தை கனம்மந்திரி குறைப்பதோடு சர்க்காரும் பொருளுதவி செய்ய வழி தேடவேண்டுமென்றும்குறிக்கப்பட்டிருந்தது.

வளர்ச்சி செதிஅமைச்சர் திரு எம். ஆர் சேதுரெத்தனம் அய்யர் அவர்களுக்கு வாசித்துக் கொடுத்த பத்திரத்தில் செங்கல்பட்டு விவசாய முன்னேற்றத்தில் கனம் மந்திரி கருத்துக் கொள்ளல் வேண்டுமென்று குறிக்கப்பட்டிருந்தது.

பதிலளிக்கையில் கனம் மந்திரிகள் மூவரும் செங்கல்பட்டு வாசிகளின் குறைகளைக் குறித்துக் கவனித்துத் தங்களாலானதைச் செய்வதாக வாக்களித்தனர்.

வந்தனை கூறக் கூட்டம் கலைந்தது.

பானகல் அரசர் படத்திறப்பு விழா.

இன்றுகாலை சுயமரியாதை மகாநாட்டுப் பந்தலில் ஜில்லா போர்டுக்கு மாஜி ஜில்லாபோர்டு தலைவரான சிமான் வெங்கடராகவலு ரெட்டியார் அவர்களால் அளிக்கப்பட்ட பானகல் அரசரின் அழகிய உருவப்படமொன்றை திரு. எ. ராமசாமி முதலியார் அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் சட்டமெம்பர் கனம் திவான் பகதூர் எம். கிருஷ்ணன் நாயர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அக்கூட்டத்திற்குச் சுமார் பதினாயிரம் பேருக்கு அதிகமானவர்கள் வந்திருந்தனர். பந்தல் காகிதப் புஷ்பங்களாலும், கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்ததுடன் தலைவர்கள் பேருரை அனைவருக்கும் கேட்கக் கூடியவாறு சப்தவிமர்சனிகளும் அமைக்கப்பட்டிருந்தன. கூட்டத்திற்கு அநேகமாதர்களும் மற்றையோரும் வந்திருந்தனர். மேடையின் மீதிருந்தவர்களுள் முக்கியமானவர்களாவது:—

கூட்ட நடவடிக்கைகள் துவக்கப்படுமுன் வாலாஜாபாத் இந்துமத பாடசாலை மாணவர்களால் பானகல் அரசரின்பெயரால் பல உருக்கமான பாடல்கள் பாடப்பட்டன. • • •

மந்திரிகள் கனம சுப்பராயன், சேதுரத்னம் ஐயர், எஸ். முத்தையா முதலியார், மத்திய மாகாண மந்திரி திரு. ராகவேந்திரராவ் நாயுடு, திவான்பகதூர்கள் டி. வரதாராஜுலு நாயுடு, வெங்கடநாராயண நாயுடு, சீமான்கள் எ. ராமசாமி முதலியார், எம். கே. ரெட்டி, வேதாசலமுதலியார், கண்ணப்பர், பி. எஸ். குருசாமிநாயுடு, எம். தாமோதரம்நாயுடு, கனம் எம். கிருஷ்ணன் நாயர், பி. வி. எதிராஜுலுநாயுடு, ராமனுதபுரம் ராஜா வெங்கடகிரி குமார ராஜா டி. சுந்தரராவ்நாயுடு, டி. எஸ். நடராஜ பிள்ளை, கே. வி. மேனன் சீமதி நாயகம் அவர்கள், ஈ. வே. ராமசாமி நாயக்கர், பி. டி. குமாரசாமி செட்டியார், சிவராஜ், ஆரியா, எ. டி. பன்னீர் செல்வம், தாஜுடீன் சாகிப், குடியாத்தம் முனிசிபல் கவுன்சிலர் எஸ். துரைசாமி செட்டிகாரு, பரங்கிமலை விவசாயடிமான்ஸ்டிரேட்டர் எ. எஸ். நித்திய கல்யாணரெட்டி, காஞ்சீவரம் டி. வெங்கட சுப்பாரெட்டி, மதுரை வக்கில் கே. பீ. நாயுடு செங்கல்பட்டு உதவி இஞ்சினீயர் திரு. கேசவன், சேலம் வியாபாரி அப்துல் கபூர், செங்கல்பட்டு ஓவர்சியர் பீ குப்புசாமி முதலியார், செங்கல்பட்டு ஜில்லா போர்டு இன்சினியர் ஆபீஸ், மானேஜர் பீ. ரெங்கநாதம் நாயுடு, செங்கல்பட்டு, உதவி இஞ்சினியர் எஸ். கலியாணராம ஐயர், செங்கல்பட்டு உதவி இன்சினியர் பி. எ. கிருஷ்ணசாமி அய்யர், பென்னிகம்பெனி மானேஜர், டி. சி. வேணுநாதம், பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம், சித்தூர் லட்சுமணரெட்டி, மரக்காணம் சமீன்தார் எம். ஈ. தாவப்ப முதலியார், வானூர் மிராசுதார் ஆர். ராமசாமி நாயுடு, மரக்காணம் சமீன்தார் எம். இ. ராஜமாணிக்கம் முதலியார், விழுப்புரம் கௌரவ மாஜிஸ்ரேட் ஜனுப் ஷேக் காதர்சாகிப், விழுப்புரம் மாஜி போலீஸ் சூப்பிரன்டெண்டு கான்பகதூர் மஹமத்கான், விழுப்புரம் சேர்மன் எம். கோவிந்தராஜுலு நாயுடுகாரு, விழுப்புரம் முனிசிபல் கவுன்சிலர் வீ. குமாரசாமி முதலியார், விழுப்புரம் முனிசிபல் கவுன்சிலர் எம். ஷண்முகம் உடையார், விழுப்புரம் கண்டிராக்டர், எ. அப்பாஜி பிள்ளை, ஆரணி கௌரவ மாஜிஸ்டிரேட், எ. திருவேங்கட முதலியார், பட்டிவீரன்பட்டி, கே. எஸ். என். பீ. நடராஜ நாடார், ப. கா. சி. அய்யம் பெருமாள் நாடார், பழனிச்சாமி நாடார், முத்துநாடார், விருதுநகர் முனிசிபல் கவுன்சிலர் எஸ். பீ. வின்சென்டு, டீ. எப். என். ஓய். சோமசுந்திர நாடார், டீ. எம். எஸ். தனகோட்டி நாடார் ஆர். எஸ். நாயுடு. எம். டி. சுப்ரமணிய முதலியார், வீ. வெ. விஜய நாடார் பி. டி. ராஜன், எம். டி. எஸ். அய்யாதுரை முதலியார், சீத்தாராம், அலாவுதீன் ராவுத்தர், பி. கே. பெருமாள் நாடார் என். பி. எஸ். நாச்சியப்ப நாடார், டபிளியூ. பி. எம். பெரியண்ண நாடார், எ. எஸ். எ. முருகைய நாடார், எம். கொண்டி ரங்க செட்டியார், டாக்டர் எ. எம். சந்திர மூர்த்தி எஸ். பி. என். செட்டியார், திலக்கோட்டை, கூ. அ. காசியப்பப் பிள்ளை, சின்னையா சேர்வை, வடகாசி பிள்ளை, பொன்னுசாமி பிள்ளை ரெங்கசாமி நாயுடு, வீரணபத்தர், சொர்ணம் பிள்ளை, தேவதானப்பட்டி பட்டமலை சாமியார், எஸ். எம். கணபதி, நாடார் வடுகபட்டி, மாலையப்ப நாடார் தேவதானப்பட்டி. கே. எஸ். என். பெரியதம்பி நாடார் டபிளியூ. பி. எ. சந்திரசேகர நாடார், கே. எஸ். என். நடராஜன். ஓ. ஆர். கருப்பையாநாடார். எ. கே. வி. அய்யம் பெருமாள் நாடார், என். எஸ். குமார நாடார் சோலை நாடார், திண்டுக்கல். எஸ். கூடலிங்கம் பிள்ளை, மதுரை. எஸ். ரெங்கநாத நாயுடு. எ. கண்ணுசாமி பிள்ளை, பி. மதுரமுத்து பிள்ளை மதுரை துலாசாமி, முனிசிபல் கவுன்சிலர், மதுரை நடேசம்பிள்ளை, டி. எம். சண்முக சுந்தரம் அழகிய சுந்தரம் பிள்ளை அய்யம் பாளையம். எஸ். முத்தையாதேவர், நாங்குனேரி. அறிவானந்த சாமி, கருப்பட்டி அருணாசலம் சேர்வை, கருப்பைய நாடார் அண்ணாமலைநாடார், திருமங்கலம். ராமய்யநாடார் எழாயிரம்பண்ணை சக்கரபாணி நாயுடு எ. எஸ். சிதம்பரம், திருமங்கலம். பச்சைமுத்து கோனர், கெ. ஷண்முகம்பிள்ளை இ. ம; கோபால கிருஷ்ணன் முத்து காமாக்ஷி முதலியார், கே. பி. நாயுடு பி. ரெங்கைய நாயுடு, எ. என். வெங்கடசாமி நாயுடு, துவாதசாந்தம், இராமேஸ்வரம். பி. குப்புசாமி செட்டியார். கல்யாண சுந்தர முதலியார், இராமநாதன் செட்டியார், ஆறுமுகம் பிள்ளை, கணபதி பிள்ளை, மகாலிங்கம் பிள்ளை, சதாசிவம் பிள்ளை, எம். பொன்னுசாமி பிள்ளை, சிவகெங்கை, மீனாக்ஷி சுந்திர முதலியார், சிவகெங்கை. மாணிக்கம் சேர்வை சிவகங்கை வெங்கிடாஜலவெ தண்டமான் ஆர். எம். வேலுப்பிள்ளை நாச்சியப்ப அம்பலம் எஸ். வி. சுப்பிரமணிய பிள்ளை முத்துநாயுடு, மேலூர் ஜி. மாணிக்கம் மூ. வெ. மு. முத்துவடிவேல் நாடார், திருமங்கலம் எஸ். எம். சிவசுப்பிரமணிய நாடார் பி. எம். பெரிய காந்த நாடார். எஸ். பி. மீ. மீருன் இராவுத்தர் போடி நாயக்கனூர் எம். எஸ். சுந்தர லிங்கம். கோவிந்த நாயுடு பரமக்குடி ரெத்தின சாமி நாடார் தங்கமணி நாடார் புன்னைய்ய நாடார், முனிசிபல் கவுன்சிலர் அலாவுதீன் இராவுசா லைமுதலியார் இராமச்சந்திரன்சேர்வை சிவகெங்கை தியாகராஜமுதலியார் ஷண்முகவேலு செந்தி குமார நாடார் கல்ல குத்தாலம் பிள்ளை மா, வெ, பழனிசாமிநாடார் ரெங்கசாமிநாயுடு ஜவுளி கடை விருதுநகர் வீரணபண்டிதர் கு. ஆ. முத்து நாடார். சோ. ஆ. சொக்கலிங்க பாண்டியர். வ. ச. வள்ளிநாயக நாடார். பெ. ப. பழனிசாமி நாடார். ச. சு. பழனிச்சாமி நாடார். பெ. சிவ பெ. ஏனுகிநாதநாடார். எஸ். ராமசாமிநாடார். வீரப்ப நாடார். தி. கருப்பையாபிள்ளை. கு. சிவகெங்கை பெ. சுந்தரமகாலிங்கநாடார் அ. கு. சி. சிவசுப்பிரமணியமுதலியார் வா. து. கைலாசம்பிள்ளை, சாது கந்தசாமி. சங்கரலிங்கம் சேர்வை, எஸ். நாராயணன், உ. அ. சுந்தரமகாலிங்கம், அனுமார் ஐயா, க. முத்துச் செட்டியார், சங்கரன் செட்டியார்; வா. து. வாழ வந்தான். கவி. ராஜ பொன்னு செட்டியார், சோமசுந்திரம் செட்டியார். சுப்பையா சேர்வை, குருஸாமிக்குடும்பன், வீ. ர. சு. பு. வீரய்யா செட்டியார்,

திரு. ராமசாமி முதலியார் பேருரை

கூட்ட நடவடிக்கைகள் துவக்கப்பட்டதும் திரு. எ. ராமசாமி முதலியார் பெரும் கரகோஷத்தினிடையே அக்கிராசனம் வகித்து கனம் திவான்பகதூர் எம். கிருஷ்ணன் நாயர் அவர்களை செங்கற்பட்டு ஜில்லா போர்டு சார்பாய் ஜில்லா போர்டுக்குப் பரிசளிக்கப்பட்ட காலஞ்சென்ற பானகல் அரசர் அவர்களின் உருவப்படத்தைத் திறந்து வைக்கும்படி கேட்டுக் கொண்டு பேசுகையில் கூறியதாவது:—என்னை இந்த ஒப்பற்ற சந்தர்ப்பத்தில் தலைமை வகிக்கக் கேட்டுக்கொண்டதற்கு என் வந்தனத்தையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். காலஞ்சென்ற நமது தலைவர் பானகல் அரசர் உருவப் படத்தைத் திறந்துவைக்கும்படி கனம் கிருஷ்ணன் நாயர் அவர்களைக் கேட்டுக் கொள்ளும் பொறுப்புஎனக்களிக்கப்பட்டது. அவர் இவ்வேலைக்குப்பலவகையிலும் பொருத்தமுடையவரேயாகு மென்பதில் சந்தேகமில்லை. கனம் கிருஷ்ணன்நாயர் காலஞ்சென்ற பானகல் அரசரால் மிகுதியும் அன்பும் நம்பிக்கையும் கௌரவமும் காட்டப்பட்டு அவருடைய ஆப்த நண்பராயிருந்து வந்திருக்கின்றார். நண்பர் கிருஷ்ணன் நாயர் அவர்கள் சட்டசபையில் தாம் உத்தியோகப்பதவி எற்குமுன் ஜஸ்டிஸ் கட்சியின் சட்டசபைத் தலைவராயிருந்து ராஜீய வாழ்க்கையில் மட்டுமன்றி சமூகாய வாழ்க்கையிலும் சுயமரியாதையை வற்புறுத்தி வந்திருக்கின்றார். கனம் நாயர் அவர்கள் தலைவர் பானகல் அரசரின் உண்மையும் நம்பிக்கையுமுள்ள சகாவாயிருந்திருக்கின்றார். இச்சந்தர்ப்பத்தில் அத்தகைய பெரியாரை நமது தலைவர் படத்தைத் திறந்துவைக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது பல வகையிலும் பொருத்தமானதென்பதில் சந்தேகமில்லை. நமது தலைவர் பானகல் அரசர் சாதாரண மனிதருள் அரசனும் அரசருள் சாதாரண மனிதனும் ஒப்பற்ற அருங்குணங்கள் வாய்ந்த சிலராய்த்திகழ்ந்து வந்தார். (கரகோஷம்) அவர் இங்குமங்கும் காற்றடித்தாலும் அசையும் சில மனிதரைப் போன்ற வராயில்லாது (நகைப்பும் கரகோஷமும்) ராஜீய வாழ்க்கையிலும் மற்றப்படியு எப்போதும் தூய்மையான முறைகளில் போராடும் இயல்புடையவராயிருந்தார். ராஜீய வாழ்க்கையிலும் கபடமற்று கௌரவமாயும் பகிரங்கமாயும் போராட வேண்டுமென்னும் உத்தமமான கொள்கையைப் புகுத்தியவரும் அவரே யாகும். (கரகோஷம்) அவருடைய ஆன்மா எப்போதும் நம்மில் எல்லோரிடையு மிருப்பது போன்றே இன்று இம்மாபெரும் பந்தலிலும் நமக்குதவி நிற்கின்றது. இன்று இம்மகாநாட்டுப்பந்தலில் செங்கற்பட்டு ஜில்லா போர்டு சார்பாக நமது தலைவர் பானகல் அரசரைக் கௌரவிப்பதற்காக மட்டுமன்றி ஆறுண்டுகளாக மந்திரியாயிருந்து நம்மக்களுக்குச் செய்துள்ள நன்மைகளுக்கு நன்றி செலுத்துமுகத்தானும் அவர் ஞாபகார்த்தமாக இப்படம் செங்கல்பட்டு ஜில்லா போர்டாருக்குப் பரிசளிக்கப்பட்டிருக்கின்றது. அவருடைய அருங்குணங்களை நண்பர்கள் மட்டுமன்றி விரோதிகளும் பல்வேறு கட்சியாரும் புகழ்ந்து பாராட்டியுமிருக்கின்றனர். நான் காலஞ்சென்ற தலைவர் பானகல் அரசருடன் சேர்ந்துழைத்து வந்த ... என்னை பானகல் ஆள் என்றும் சொல்வதுண்டு (நகைப்பும் கரகோஷமும்) அவர் மந்திரியாயிருந்து செய்துள்ள நன்மைகளைவிட நமக்கு ஊக்கத்தையும் நம்பிக்கையையுமளிப்பது வேறொன்றுமில்லை. அவையே நாம் பானகல்ஆட்கள் என்று பெயர் தாங்குவதற்கும் ஏற்ற கௌரவமாகும் (கரகோஷம்) நாம் இயந்திரங்கள் போலவும் அவர் இயந்திரத்தை இயக்கும் ஒருசக்திபோலவுமிருந்திருக்கின்றார். மற்றும் அவர் ஆத்ம சக்தியாயும் நாம் அவருடைய நோக்கங்களை நிறைவேற்றும் கருவிகளாயுமிருந்தோம். நாம் அவருடைய கட்டளைகளுக்கும் உதாரணங்களுக்கும்மறுவார்த்தை சொல்லாது அவர்சென்ற வழியை உறுதியாகப் பின்பற்றிநடந்துவந்துள்ளோம். சிலர் ஏதோ மூரண்பட்டபோதிலும் முடிவில் அவர் வழி பின்பற்ற ஒற்றுமைப்பட்டிருக்கின்றனர் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. அவருடைய அரிய உதாரணங்களால் நாம் எதிர்காலதில் பெரும் வெற்றி பெறுவோம் என்று உறுதியாய் நம்புகின்றேன். அத்தகைய பெரியாரின் உருவப்படத்தைத் திறந்து வைக்கும்படி என் சார்பாயும், இங்கு கூடியுள்ள ஆயிக்கணக்கான உங்கள் சார்பாகவும் கனம் கிருஷ்ணன் நாயரவர்களைக் கேட்டு கொள்ளுகிறேன் (பெருத்தகரகோஷம்.)

கனம் கிருஷ்ணன் நாயர் சொற்பெருக்கு

பிறகு சட்ட மெம்பர் கனம் திவான் பகதூர் எ. கிருஷ்ணன் நாயர் அவர்கள் காலஞ்சென்ற பானகல் அரசர் உருவப் படத்தைத் திறந்து வைக்கு முன் பெருத்த கரகோஷத்திடையே பேசுகையில் குறிப்பிட்டதாவது: இன்று பானகல் அரசர் உருவப்படத்தைத் திறந்து வைக்கும்படி கேட்டுக் கொண்டு என்னை மிகுதியும் கௌரவித்ததற்கு என் வந்தனத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். என்னைக் குறித்து சீமான் ராமசாமி முதலியார் அவர்கள் பலவாறு புகழ்ந்து சொன்னதை நம்பவேண்டாம் (நகைப்பு). அவர் எப்போதும் என் விஷயத்தில் பட்சபாதத்துடன் நடந்து கொள்வதுவழக்கந்தான் (நகைப்பு). அவருக்கு வர்ணங்கள் தான் தெரியும். அவர் என்னை வர்ணக் கண்ணாடி மூலமாகப் பார்க்கின்றார்(கரகோஷமும் நகைப்பும்) அவர்நான் உடைத்தாயிருப்பதாகபலவாறுபுகழ்ந்துபேசியகுணங்களும் ஆற்றல்களும் எனக்கில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன் நான் நமது தலைவர் காலஞ்சென்ற பானகல் அரசருடன் சட்டசபையிலும்வெளியிலும் 8 வருடம் சகாவாகச் சேர்ந்துழைத்திருக்கின்றேன். சீர்திருத்தம் வழங்கப்படுவதற்கு முன்பு 1917 ம் வருடம் இங்கிலாந்துக்குச் சென்று கூட்டுப்பார்லிமெண்டுக் கமிட்டி முன் சாட்சியம் கொடுக்கச்சென்ற காலை இந்திய மக்கள் சார்பாகப் பேசி அங்கு அதிகாரிகள் மனதில் பதியச்செய்தார். சீர்திருத்தம் வழங்கப்பட்டபின் அச்சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட சர்க்காரின் முதன் மந்திரியாய் ஸ்தல சுயாட்சியில் வல சீர்திருத்தங்களும் நன்மைகளும் செய்திருப்பது பெரிதும் பாராட்டத்தக்கதாகும். நமது தலைவர் பிறப்பினால் ராஜாவாயினும் அவர் தம் உழைப்பிலும் தன்மையிலும் ஜனநாயகக் கொள்கை மிகுந்த சாதாரண மனிதராயிருந்தார். அவருடன் வேலை செய்து அவர் வழிகளைப் பின்பற்றுவது யாருக்கும் பெரும் பாக்கியமேயாகும். சட்டசபைக் கூட்டங்களில் காலையிலொரு மணிநேரம் கேள்விகள் கேட்டுபலவாறு தொந்தரை செய்யப்படும் காலத்தும் அவர் அவசியமான பதிலுக்கு அதிகமாகவோ அல்லது குறைவாகவோ ஒரு வார்த்தை கூட சொல்லாமலும் அமைதியை இழக்காமலும் கோப மென்பது காட்டாமலும் சாந்தமாயிருக்கும் இயல்புடையவர். (கரகோஷம்) அவர் சென்ற எட்டு வருடமாக சென்னை அரசியலில் சர்வாதிகாரமும் ஆதிக்கமும் பெற்றிருந்தார். (பெருத்த கரகோஷம்) அவர் சென்னை சர்க்காரில் ஆதிக்கம் வகித்து மெம்பராயிருந்த காலத்துச் செய்துள்ள வேலைகளுக்கும் உதவிகளுக்கும் சர்க்காரும் அவருக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றது. (கரகோஷம்) அவர் மந்திரியாயில்லாத காலத்தும் சர்க்காருக்குப் பலவகையிலும் உதவி புரிந்திருப்பதுடன் தக்க யோசனைகளும் சொல்லிவந்திருக்கின்றார். (கரகோஷம்) சமீபத்தில்தான் அதாவது இன்றைக்கு இரண்டுமாதங்களுக்கு முன்தான் அவர் காலஞ்சென்றார். அச்சம்பவத்தினால்நமக்கேற்பட்டகஷ்டத்திலிருந்தும்வருத்தத்திலிருந்தும் நாம் இன்னும் சிதானிக்கமுடியாதிருக்கின்றோம், நமது தலைவர்மரணத்தால் ஏற்பட்ட கஷ்டத்தை ஒருபோதும் ஈடுசெய்ய முடியாதென்பது திண்ணம் (கேளுங்கள்) எதிர்காலத்தில் தென்னிந்திய சரித்திரத்தை எழுதும் சரித்திரக்காரர்கள் நமது மாகாணத்துப் பொதுவாழ்வில் ராஜாசாகிப் அவர்கள் சரித்திரத்தைக் தான் முதன்மையாகக் குறிப்பிடக் கூடும்.

தற்போது இப்போர்டின்தலைவராயிருக்கும் திரு. எம். கே. ரெட்டியாரின் தந்தையும் இப்போர்டின் மாஜி தலைவருமான திருவாளர் வெங்கடராகவலு ரெட்டியாரால் அளிக்கப்பட்ட இவ்வுருவப் படத்தை மகிழ்ச்சியுடன் நான் திறந்து வைக்கின்றேன். இப்படத்தைக்குறித்து திறந்து வைப்பதற்குமுன் படத்தை இப் போர்டுக்குப் பரிசளித்த திரு ரெட்டியார் அவர்களைக் குறித்தும் இரண்டொரு வார்த்தைகள் சொல்ல வேண்டுவதும் என்கடமையாயிருக்கிறது. சீமான்வெங்கடராகவலு ரெட்டியார் இந்த போர்டில் 37 வருடங்கள் மெம்பராயிருந்ததுடன் பிறகு சேர்மெனுமாயும் சில வருடங்களிருந்திருக்கின்றார். அவர் தாலுக்கா போர்டு தலைவராயும் பிறகு தற்போது நமது புதல்வர் தலைவராயிருக்கும் ஜில்லா போர்டின் முதலாவது உத்தியோகப் பற்றற்ற தலைவராயும் பல வருடங்களிருந்திருக்கிறார். (கரகோஷம்) மேலும் அவர் ஜில்லா கல்விச் சபையிலும் மற்றத் துறைகளிலும் செய்துள்ள உதவியும் ஊழியமும் பெரிதும் பாராட்டத்தக்கதாகும். செங்கற்பட்டு ஜில்லா போர்டின் புதிய கட்டடத்திற்கு ராஜாசாகிப் அவர்கள் பெயரையிடுவதற்கு அனுமதிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டபோது அவர் அதற்கு மறுத்து சீமான் வெங்கடராகவரெட்டியார் பெயரை இடும்படி வற்புறுத்தியும் கேளாது ஒரே பிடியாய்

பறந்தது உங்கள் கவலை எல்லாம்

Souring

"சௌரியா"

ஸ்திரீகளுக்கோர்தேவப்பிரசாதம் ருதுசூலை, சூதகவலி, மாதவிடை காலத்திய வயிற்றுவலி முதலிய எல்லா வியாதிகளையும் தீர்த்து புத்திர பாக்கியத்தையும், மிக்க பலத்தையும், அழகையும் தரக்கூடியது. ஒரு புட்டியின் விலை ரூ. 3-0-0சேட்லாக்இனும்.

விலாசம்:—
சங்காராம் மேடிகல்ஹால்,
சூகை, சேலம். (தென் இந்தியா)
(310 எ)

3 ஆம் ஆண்டு! 3 ஆம் ஆண்டு !!

மாருதி

ஆசிரியர் காந்தி சோதிடர் V. K. சடகோபாச்சாரியார் சோதிட விஷயங்களுடன் வெளிவரும் மாதப் பத்திரிகை இதுவே. ராஜ்ய விஷயங்கள், நீதிக்கதைப் பகுதி, பல கட்டுரைகளுடன் வெளிவரும். 'ஆயுர்தாய தர்ப்பணம்' என்கிற அருமையான கிரந்தம் வெளிவருகிறது. இன்றே சந்தாதாரராக சேருங்கள். மாதிரி பத்திரிகை விரும்புவோர் 4 அணா ஸ்டாம்பு அனுப்பி பெற்றுக்கொள்ளவும்.

	உள்நாடு.	வெளிநாடு.
ஒரு வருட சந்தா	ரூ. 3-0-0.	ரூ. 3-4-0

மானேஜர்:-"மாருதி" காரியாலயம்,
(107 பி) திருத்தணி, சித்தூர் ஜில்லா.

வெளியாய்விட்டது! வெளியாய்விட்டது!!

கௌஹர்ஜான் காதல்

இரண்டாம் பாகம் வெளியாய்விட்டது !!!

இந்நாவலின் முதற்பாகத்தைப் படித்தவர்களுக்கு இதன் மேன்மையைக் கூறவேண்டியதில்லை. இந்நாவல் நாவலுலகிலேயே தலைசிறந்ததாகும். பல கலர் ஹாப்டோன் படங்களடங்கியது.

360 பக்கங் கொண்ட முதற் பாகம் விலை ரூ. 1—8—0 | வி. பி.
380 பக்கங்கொண்ட இரண்டாம் பாகம் ,, ரூ. 1—8—0 | வேறு.

தாருல் இஸ்லாம் புத்தகசாலை,
241. எ. நெ. 73, தம்புசெட்டித்தெரு, தபாற்பெட்டி 15, சென்னை.

ஆச்சரியம்!

652 திணுசுகள்! புதிய மாதிரி!! திணுசுகள் 652!!!

இந்த வளையல் புது திணுசுகளிலும், மங்களூர் பட்டைகளிலும், கலரும், பளபளப்பும், சுத்தமான பவுன் தங்கத்துக்குச் சமானமாய் சிரமிருக்கும். இந்த வளையல் பார்வைக்கு, இதற்கும் பவுன் தங்கத்திற்கும் வித்தியாசம் தெரியாது. அநேகம்பேர் பொன் என்று நினைக்கக்கூடும். இந்த வளையல் கெடாமலும் உடையாமலும் இருக்கும். இதுமாதிரி இதுவரையில் யாரும் பார்த்திராதது. டி வளையல்கள் அநேக சயிஸ்களில் கைவசம் தயாராயிருக்கிறது. இன்னும் அநேகவிதமான கழுத்தில் அணியக்கூடிய ரோல்டு கோல்டு (ROLD GOLD) கடியார செயின்கள் கிடைக்கும். ஏஜண்டுகள் தேவை.

வளையல்கள் விலை:—

ஜோதை 1-க்கு பெரிய சயிஸ் ரூ. 2—14—0.
டி சிறிய சயிஸ் ரூ. 2—10—0.
செயின் பிடி 1-க்கு (3 அங்குலம்) விலை ரூ. 0—12—0.

கமலா அண்ட் கம்பெனி,
(399 எ) 69, நாராயண முதலி தெருவு, சென்னை.

(பலத்தகரகோஷம், ராகவேந்திரராவ் நாயுடு அவர்களுக்குஜே!) இன்னும் மைசூரிலிருந்து சட்டசபை மெம்பராகிய நீலகிரி சஞ்சீவி ஐயா அவர்களும், இன்னும் இரண்டு மாகாணங்களிலிருந்து அநேக கனவான்களும், பெரியார்களும், எங்கள் ஜில்லா மிராசுதாராயிருக்கிற "பட்டக்காரர்" அவர்களும் இன்றைய தினம் இந்த மகாநாட்டுக்கு வந்திருப்பதற்காக நம் செங்கல்பட்டு போர்டார் சார்பாகவும் இந்தக் கூட்டத்திலுள்ள மகாஜனங்கள் சார்பாகவும் என்னுடைய சார்பாகவும், ஒரு சந்தில் வேண்டுமென்று ஒளிந்து கொண்டிருக்கிற கைவல்ய சாமியார் (ஜே ஆரவாரம்) அவர்களுக்கும் இங்கு திரள்திரளாக விஜயஞ் செய்திருக்கிற நம்முடைய தாய்மார்களுக்கும் நம்மனப் பூர்த்தியான நன்றியைச் செலுத்துகிறோம். எனவே, என்னுடைய சொந்த முறையிலே செங்கற்பட்டு போர்டு தலைவருக்கும் இந்த சிறிய தொண்டை எனக்குக் கொடுத்ததற்காக வேண்டியும் கௌரவப்படுத்த வேண்டுமென்ற ஆசையிலே இதை அளித்ததற்காக வேண்டியும் நானும் என் சார்பாகவே என்னுடைய நன்றியை அளிக்கிறேன்.

மந்திரி கனம் சுப்பராயன் படத் திறப்புவிழா

இன்று மாலை 3-30-மணிக்கு மகாநாட்டுப் பந்தலில் செங்கற்பட்டு ஜில்லா போர்டுக்கு மாஜி தலைவர் திரு. வெங்கடராகவலு ரெட்டியார் அவர்களால் பரிசளிக்கப்பட்ட டாக்டர் சுப்பராயன் அவர்களின் உருவப்படம் கனம் மகமது உஸ்மான் சாகிப் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அச்சமயம் மேடை மீது பிரபல தலைவர்கள் பலரும் ராமநாதபுரம் ராஜா. திவான் பகதூர் பி. வி. எதிராஜுலுநாயுடு, சிமான் டி. எஸ். நடராஜ பிள்ளை, வேங்கடகிரி குமார ராஜா, திவான் பகதூர் வெங்கட நாராயண

பிறகு திரு. சௌந்திரபாண்டிய நாடார் அவர்களை மகாநாட்டுக்குத் தலைமை வகிக்கும்படி கேட்டுக் கொள்வதாக திரு. ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு ; சிமான்கள் பி. டி. குமாரசாமி செட்டியார், சுரேந்திரநாத் ஆரியா முதலானவர்களால் ஆதரித்துப் பேசப்பட்ட பின் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு பெருத்த கரகோஷத்தினிடையே மகா நாட்டுத் தலைவா திரு. டப்ளியூ. பி. சௌந்திர பாண்டிய நாடார் அக்கிராசனப் பிரசங்கம் நிகழ்த்தினர் (அக்கிராசனர் பேருரை முன்பே திராவிடனில் வெளியாயிருக்கிறது)

மகாநாட்டுத் தலைவர் பேருரை முடிந்த பின் மகாநாடு மறுநாள் கூடுவதாகக் கலைந்தது.

இன்று போதிய இடமில்லாமையால் மாலை நிகழ்ச்சிகள் முற்றும் வெளியிட முடியவில்லை. முழு விவரங்களும் நாளை வெளிவரும்.

காபூல் ஜர்மன் தூதர்

கல்கத்தா, பிப், 17.

காபூலில் ஆப்கன் ஸ்தானிகராக உத்தியோகம் புரிவதற்கு பாரன் லெப்போல்டு பிளஸ்ஸன் நியமிக்கப்பெற்றிருக்கிறார். இவர் வடமேற்கெல்லைபுறத்திலிருந்து காபூலிற்கு ஆகாய மார்க்கமாய்ப் பறந்து செல்லுவார். கல்கத்தாவில் இவருக்குப் பிரதியாக நியமிக்கப்படுவார் இன்னார் எனப் பிரசுரிக்கப்படவில்லை.

கனையன்னூர் புலையர் மகா நாடு

கொச்சி, பிப் 17.

கொச்சி சமஸ்தானத்திலுள்ள கனையன்னூர் தாலுக்காவில் கனையன்னூர் புலையர்கள் மகாநாடு நடைபெற்றது. அது

சிங்கப்பெருமாள் கோவில் வரவேற்பு.

(போட்டோ நியூஸ் ஏஜென்ஸி)

முதலானவர்களும் மற்றும் பலரும் வந்திருந்தனர்.

மந்திரி சேதுரத்னமய்யர்

பிறகு அக்கிராசனம் வகித்து சர் மகமது உஸ்மான் சாகிப் அவர்களை அப்படத்தைத் திறந்து வைக்கும்படி உருக்கமாகப் பேசினர். சர் மகமது உஸ்மான் சாகிப் அவர்களும் கனம் மந்திரி டாக்டர் சுப்பராயன் அவர்கள் குணநிசயங்களையும் உழைப்பையும் பாராட்டிப் பேசிய பின் படத்தைத் திறந்துவைத்தார். முடிவில் திரு. கே.வி.மேனன் அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் கலைந்தது.

சுயமரியாதை மகாநாடு

மாலை 4 மணிக்கு சுயமரியாதை மகாநாடு கூடியதும் மந்திரி கனம் டாக்டர் சுப்பராயன் அவர்கள் மகாநாட்டைத் திறந்து வைத்து உருக்கமான சொற்பெருக்கிட்டார். இதனை திரு. கண்ணப்பர் அவர்கள் தமிழில் பிறகு மொழிபெயர்த்துச்சொன்னார். (இதன் விவரம் முன்பே வெளியாயிருக்கிறது.)

பின்னர் திரு. பி. டி. ராஜன் அவர்கள் சர். தியாகராயர் நிலையத்தின் சம்பந்தமான கடனைத்தீர்ப்பதற்கும் ஜஸ்டிஸ் திராவிடன் முதலிய பத்திரிகைகளை அபிவிருத்தி செய்வதற்கும் பொருளுதவி செய்யும்படி பேசிய பின் அதனை ஆதரித்து திரு. ஈ. வே. ராமசாமி நாயக்கர் அவர்களும் நெடுநேரம் உருக்கமாகப் பேசிய பின் பல தலைவர்கள் உண்டியல்களுடன் பணம்வசூலித்தனர். இந்நிலையில் மகாநாடு சிற்றுண்டிக்கு கலைந்து மாலை 6—மணிக்குக் கூடிய போது துவக்கத்தில் சீமதிகமலவேணி என்னும் சிறு பெண் இனிமையான சுயமரியாதைப் பாடல்கள் பாடினார். பின்னர் மகாநாட்டு வரவேற்புக் கழகத் தலைவர் திரு எம்.கே. ரெட்டியார் மகாநாட்டுப் பிரதிநிதிகளையும் விஸிட்டர்களையும் வரவேற்றுப் பேசினார். (இவ்விவரமும் முன்பே வெளியாயிருக்கிறது)

காலை கொச்சி திவான் ராவ் பகதூர் டி. எஸ். நாராயணய்யர் தலைமை வகித்தார்.

பம்பாயில் கனம் சாஸ்திரி.

பம்பாய், பிப்ரவரி, 17

பம்பாயில் பெருந்திரளான மாணவர்கள் முன்னிலையில், கனம் சாஸ்திரி ஓர் சொற்பெருக்காற்றினர். அதுகாலை. டாக்டர் பெசண்டு தலைமை வகித்தார் தென் ஆப்பிரிக்காவில் உள்ள இந்தியர்களின் நிலைமைக்கு அடிப்படையான விஷயங்கள் என்பதைப்பற்றி 45 நிமிஷம் பேசினர். மாணவர்கள் எல்லாம் மிகவும் அமைதியாகவும் நுட்பமாயும் இதனைக் கேட்டுவந்தார்கள். கனம் சாஸ்திரி நாமெல்லோரும் பிரிட்டிஷ் ஆதிக்கத்தில் இருப்பதனால், தென் ஆப்ரிக்காவில் சில சிக்கலான விஷயங்களில் இருந்து தப்புவித்துக்கொள்ள முடியவில்லையென்று, கூறுகையில், ஒரு மாணவர்பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருப்பது மகாதுர்லபம்' என்று இடைமறித்துப் பேசினர். இதற்கு கனம் சாஸ்திரி "துர்லபமோஇல்லையோ நமது நிலைமை இருக்கிறதைப்பற்றிக்கூறினேன். ஒவ்வொரு குடியேற்ற நாடும் தத்தம் நாகரீகத்தைப் பின்பற்றி நடப்பதற்கு நாம் தடையிடாதிருக்க ஒப்புக்கொண்டுள்ளோம். இந்தியாவிற்கும் இத்தஉரிமையிருந்தது. ஆனால், இந்தியா இதனை கைக்கொண்டு நடக்கவில்லை. நாம் தென்னாப்பிரிக்காவுக்கு சகலமும் அறிந்திருந்தே சென்றோம். ராண்டு என்னும் பகுதியில் இந்தியர்கள் சொந்த உபயோகத்திற்கு நிலம் வாங்கப்படாதென்று சட்டம் பிறப்பித்திருக்கின்றனர். இது வரையில் நிலம் வாங்கியிருக்கும் ஆயிரக்கணக்கான இந்தியர்களெல்லாம் தங்கள் நிலங்களை யிழந்துவிடுவார்கள். சில மாதங்கட்கு முன்புதான் இந்தியர்கள் கடைகள் வைத்திருக்கப்படாதென்றும் வேறு எவ்வித வர்த்தகமும் புரியப்படாதென்றும்சட்டம் பிறப்பிக்கப்பட்டது. சான்ஸ் பார்க்கில் இனிமேல், புதிதாக அநுமதிகள் இந்திய வர்த்தகர்கட்குத்தரமாட்டார்களாம். இவ்விதக் குறைவுகளை யெல்லாம் அறவே நிவர்த்தித்துக் கொள்ள முடியாவிட்டாலும் அவர்களிடம் நட்ட ஈடு பெறுவதற்காகவாவது கூடும். ஆனால், தென்னாப்ரிக்கா பார்லிமெண்டார் நட்டஈடு தருவதற்குச் சம்மதிக்கவில்லை. தென்னாப்ரிக்காவில் இந்திய—ஐரோப்பியர் சங்கம் ஒன்றுள்ளது. இச்சங்கத்தினுதாவில் இந்தியர்கள் ஐரோப்பியர்களைத் தங்கள் கைவசப் படுத்திக்கொண்டால், நட்டஈடாவது பெறலாம்' என்று கூறினர்.

தென்னாப்பிரிக்காவில், இன்னும் இந்தியர்கட்குள் வகுப்புத் துவேஷம் பிறக்கவில்லையென்றும் சர் கே. வி. ரெட்டி தனது சொற்பொழிவுகளில் நல்ல செல்வாக்கையடைந்துவருகிறார் என்றும், இப்பொழுது அவர்கேப்டவுனில்கூடும் பார்லிமெண்டிற்குச் சென்றிருப்பாரென்றும், அவருடைய தன்மையும் சம்பாஷணைத்திறமும் அவர்பால் இந்தியர்கட்கும் ஐரோப்பியர்கட்கும் மதிப்பை விளைத்துள்ளனவென்றும் கனம் சாஸ்திரி முடிவுரை யிறுத்தார்.

பாங்கி விசாரணைக் கமிட்டி

ந. டில்லி, பிப், 16

பாங்கி விசாரணையைப்பற்றி, ஐரோப்பியர் வர்த்தக சங்கத்தினர்களிடமும். இந்திய வர்த்தக சங்கத்தினர்களிடமும், சர். ஜார்ஜ்ஷ்கூஷ்டர் கலந்துபேசினர்,

கள்ள நாணயத் தொழிற்சாலை

3 பொற்கொல்லர்கள் கைதியானர்கள்

அகமதாபாத், பிப், 16

கள்ள நாணயங்களை அச்சடித்து விற்பனை புரிந்துவருவதாக 3 பொற்கொல்லர்கள் போலீசாரால் கைது செய்யப் பெற்றனர். இவர்கள் தங்கள் வீட்டின் அடிப்பாகத்தில் சுரங்கம் ஒன்றமைத்து அதனுள் கள்ள நாணயங்களை அச்சிட்டு, அவைகளை இந்தியா முழுதும் பரப்புவதற்கு அநேக கிளைசாலைகளையும் ஏற்பாடு செய்திருக்கின்றார்கள். இவர்களில் ஒருவர்க்கு 4வருடக் கடுங்காவலும் 2000 ரூபாய் அபராதமும், மற்றையவருக்கு 6 வருடக் கடுங்காவலும் 2000 ரூபாய் அபராதமும் மூன்றாவது பேர் வழிக்கு 2 வருடக் கடுங்காவலும் 2000 ரூபாய் அபராதமும் விதித்தார்.

ஒரு வெள்ளையர் கம்பெனிக்கு 1 பை அபராதம்

பம்பாய், பிப், 16.

தங்கள் கம்பெனியை அவதூறு செய்ததாக நியூசிலாந்து ரெட்வுட் பாங்கு கம்பெனியார் திரு. கிரீன்பிரிஜ்என்பவர் மீது 3 லக்ஷ ரூபாய்க்கு மான நஷ்ட வழக்குதொடுத்திருந்தனர். திரு. கிரீன்பிரிஜ் விளம்பரப் படுத்தியது சரியான ஆதாரங்களைக் கொண்டுள்ளதென்றும் இத்தகைய கம்பெனிக்கு நீதிமன்றத்தில் சார்பளிக்கப்படாதென்றும் கம்பேனியார் தங்கள் தொழிலை நடத்தும் முறை சந்தேகிக்கத் தக்கதா யிருக்கின்ற தென்றும் வாதிகட்கே ஒரு பை அபராதம் விதிக்க வேண்டியதென்றும் கூறி கம்பெனியார்கட்கு ஒரு பை அபராதம் விதித்தார்.

லாகூர் குண்டு விபத்து

காங்கிரஸ் குமாஸ்தாவிற்கு ஜாமின் விடுதலை

லாகூர், பிப், 16

1928 அக்டோபர் 23ந் தேதி மிண்டோ பார்க் மைதானத்தில் நடந்த தசரா கொண்டாட்டத்திற்கு சென்று விட்டு மாலையில் வீட்டுக்குத் திரும்பிவரும் பொழுது கோட்டைக்கு சமீபத்தில் இருக்கும் சிறசுரிபாக்கிற்கு அருகில் அவர்கள் மீது குண்டு போடப்பட்டதன் சம்பந்தமான விசாரணையில் கைது செய்யப்பட்டுள்ள பஞ்சாப் மாகாணகாங்கிரஸ்கமிட்டி குமாஸ்தா பாபுசிங்கையும், குருதயால் சிங், தயான்சிங் என்னும் இருமாணவர்களையும் போலீசார் ஜாமீனில் விட இசைந்துள்ளார்கள். இக்குண்டு விபத்தில் 10 பேர் மாண்டனர். 60 பேர்கள் காயமடைந்தனர்.

மோட்டார் மோதியது

ஒரு ஐரோப்பிய மாது காயம் அடைந்தார்

சென்னை, பிப்ரவரி, 18

இன்று காலை ஏறக்குறைய 10 மணியிருக்கும் போது, தேனாம்பேட்டையில் மவுண்டுரோடில் ஒரு ஐரோப்பிய மாது தன் மோட்டார் வண்டியை ஓட்டிக் கொண்டு போகையில், தற்செயலாக அம்மோட்டார் வண்டி வலது புறமாகச் சாய்ந்து ஒருமரத்தில் மோதியதாகவும், அதனால், அம்மோட்டார் வண்டி உடைந்து போனதாகவும், அந்த ஐரோப்பிய மாது முகத்திலும், கை முதலிய விடங்களிலும், பலத்த காயம் அடைந்ததாகவும், அம்மாது ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப்பட்டதாயும் தெரிகிறது.

...சந்தாதாரர்களுக்கு

அறிவிப்பு

கோயம்புத்தூர் பெரிய கடைத் தெருவு சேக்கிழார் புத்தகசாலை வைத்திருக்கும் எ. ஆர். சிவானந்த முதலியார் அவர்கள் 1-3-29 தேதி முதல் பொள்ளாச்சிக்கு நமது திராவிடன் ஏஜெண்டாக நியமிக்கப்பட்டு அவருடைய விலாசத்திற்கு பத்திரிகைகள் அனுப்பப்பட்டு வரும். நண்பர்கள் இனி ஏஜண்டினிடமே சந்தா செலுத்திப் பத்திரிகைகளை பெற்றுக்கொள்ளவும்.

மானேஜர்.

திராவிடன்

சென்னை, 1929 பிப்ரவரி 18

சுயமரியாதை மகாநாடு

செங்கற்பட்டில் நிறுவப்பட்டிருக்கும் பானகல் தோட்டத்தில் நமது முதலாவது மாகாண சுயமரியாதை மகாநாடு நேற்று துவங்கியது. மகாநாட்டின் வரவேற்புக் கழகத் தலைவர் ராவ்பகதூர் எம். கே. ரெட்டியவர்களின் சொற்பெருக்கும், தலைவர் சௌந்தர பாண்டிய நாடார் அவர்கள் சொற் பெருக்கும் மகாநாட்டைத் திறந்து வைத்த சென்னை அரசாங்க முதன் மந்திரி டாக்டர் சுப்பராயன் சொற்பெருக்கும் பிறிதோரிடத்தில் வெளியிட்டிருக்கின்றோம். இன்று டாக்டர் சுப்பராயன் அவர்களின் அருமையான சொற் பெருக்கைக் குறித்து எழுதுவோம். டாக்டர் சுப்பராயன் தம் திறப்புச் சொற்பெருக்கில் சுயமரியாதை இயக்கத்தின் தத்துவத்தைக் குறித்தும், சுயமரியாதை இயக்கம் வலுவடைய நாம் இனிமேல் என்ன செய்ய வேண்டுமென்பது பற்றியும், தெள்ளத்தெளிய எடுத்துரைத்திருக்கின்றார். முதன் முதல் டாக்டர் சுப்பராயன்,

> அரசியலிலும் சமூக இயலிலும் முன்னேற்றத்தை விரும்புவதற்குக் காரணமா யிருப்பவைகளுள், சுயமரியாதை உணர்ச்சியும் ஒன்றாயிருக்கிறது. ஆனால், நமக்குள் சமூக இயலைவிட அரசியலில் சுயமரியாதை உணர்ச்சி வேண்டும் என்று சிலர் சொல்வது எனக்கு வேடிக்கையாகவே இருக்கிறது. நாம் சுயமரியாதை உடையவர்களா யிருந்தால் அன்னிய அரசாட்சிக்கு அடிமை யாயிருத்தல்கூடாது என்று சிலர் அபிப்பிராயப் படுகிறார்களென்பதும் எனக்குத் தெரியும். அரசியலில் சுதந்திரம் கிடைக்க வேண்டுமென, படித்த மக்கள் எல்லோரும் ஆசைப்படுகிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். அரசியல் சம்பந்தமான எல்லா அமைப்புகளும் இந்த லட்சியத்தில் ஒத்த கருத்தோடு இருக்கின்றன. பழைய காலத்தில் சுதந்திர உணர்ச்சியோடு கூடிய இயக்கங்கள் இருந்திருப்பதாகக் கண்டு பிடிப்பதற்கு சரித்திரத்தை ஆராய்ச்சி செய்கிறார்கள். ஆகவே, அரசியல் துறையில் நம்மக்களிடம் ஒரு அளவுக்காவது ஒற்றுமையான கருத்து இருக்கிறது.
>
> ஆனால், சமூகத்துறையைக் கவனிக்குங்கால், முற்றிலும் வித்தியாசமான விஷயத்தைக் காண்கிறோம். நம் சமூகத்திலிருக்கும் புரோகிதத்தையும், அறிவின்மையும் மத சம்பந்தமான நம்பிக்கைகளையும் சமூக வழக்கங்களையும் அகற்ற வேண்டிய அவசியத்தை பேச்சளவில் மாத்திரம் ஒப்புக்கொள்ளுகிறவர்கள் இருக்கிறார்கள். அரசியல் கொடுமைகளுக்காக கூக்குரலிடும் ஒவ்வொரு ஆயிரம் பேர் வழிகளுக்கும், சமூக சீர்திருத்தத்திற்கு உழைப்பவர் ஒருவராவது இருப்பாரென்று உறுதி கூற முடியாது. ஆகையால், இவ்வியக்கம் சரியான காலத்தில்தான் தோன்றியிருக்கிறது என்று சொல்லுவேன். நாம்சமூக இயலில்சுயமரியாதை பெற்றாலொழிய அரசியல் பெறமுடியாது என்பதை சரியான காலத்தில் உணர்ந்து கொண்டோம். சமூகத்துறையில் முன்னேற்றத்தைத் தடுக்கின்ற நம்பிக்கைகளையும் பழக்கங்களையும் வைத்துக்கொண்டு நம் நாடு சுதந்தரம் அடையவேண்டுமென்றால் அது முடியாது என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். இவ்விதக் குருட்டு நம்பிக்கைகளும் பழைய பழக்கங்களும் இருக்கின்றவரையில் சுதந்தரமும் ஜன நாயக ஆட்சியும் பெறமுடியாது.

என்று சுயமரியாதை இயக்கத்தின் அவசியத்தைக் குறிப்பிட்டுச் சுயமரியாதை இயக்கத்தினால்தான் இந்தியா அந்நிய ஆட்சியினின்றும் விடுதலை பெறமுடியும் என்கின்றார்.

டாக்டர் சுப்பராயன் இந்தியாவில் சமூக சூழ்லகளை வைத்துக் கொண்டு அரசியலில் மட்டும் சுதந்திரம் வேண்டும் என்று சொல்வோர் யோக்கியர்களாகமாட்டார்கள் என்கின்றார். இதைத்தான் நாம் அடிக்கடி எழுதிக் கொண்டும் சொல்லிக் கொண்டும் வந்திருக்கின்றோம்.

இனி டாக்டர் சுப்பராயன் நம் இயக்கத்தின் கொள்கைகள் வலியுற வேண்டுமாயின்

> சமூகச் சீர்திருத்தங்களில் நமது ஸ்திரீகள் ஒத்துழைத்தாலன்றி, சீர்திருத்தங்கள் பயன்பெறுமெனவே கருதுகின்றேன். எல்லாத் துறைகளிலும் ஸ்திரீகளும் புருஷர்களும் ஒத்துழைத்தாலன்றி, ஸ்திரீ புருஷர்களாலாய சமூக வாழ்க்கையில் ஒரு பயனும் ஏற்படாதென துணிதல் வேண்டும். ஆதலால், நாம் உண்மையாகவே இவ்வியக்கம் வெற்றி பெற வேண்டியது அவசியமெனக் கருதினோமாகில், அவசியமாக ஸ்திரீகளுக்குக் கல்விப் பயிற்சியை அளித்து, நமது இயக்கத்தின் கொள்கைகளைப் போதித்து, அவர்களையும் நம்மோடு ஒத்துழைக்கச் செய்தல் வேண்டும். ஆடவர்களைப் பார்க்கிலும் ஸ்திரீகளே சமூக வாழ்க்கையில் பெரும் பாகத்தை நிர்வகித்து வருகின்றார்கள். ஆதலின் ஸ்திரீகள் முன்னேற்றம் சமூக முன்னேற்றத்தைக் கருதும் சுயமரியாதை இயக்கத்திற்கு இன்றியமையாததாகும். ஸ்திரீகளே முதன்முதலாக நமதியக்கத்தைப் பற்றிப் பயின்றவர்களாதல் வேண்டும். ஸ்திரீகட்கு சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகள் நன்கு அறிவுறுத்தப்பட்டால், இனி மூடப்பழக்க வழக்கங்களைப் பற்றி நாம் சற்றும் அஞ்ச வேண்டியதில்லை. சந்ததிகளும் இவ்வழக்கங்களினின்றும் விடுதலை பெறுவார்களென்று மிக்க நம்பிக்கையோடிருக்கலாம்

என்று ஆண்மக்கள் செல்லும் வழியில் பெண்மக்களையும் இழுக்க வேண்டுமென்கின்றார்.

மற்றும் டாக்டர் சுப்பராயன் சுயமரியாதை இயக்கத்தைப் பரப்புதற்காக

> சுயமரியாதை இயக்கம் முறையாக நடைபெறவேண்டுமானால், இவ்வியக்கத்திற்கு விதி முறைகளும், ஆண்டு நிகழ்ச்சிகளும் அவசியம் தேவையாகும். ஆனால், ஆண்டுதோறும் நடாத்தும் மகாநாடுகளால் மட்டும் நமது லக்ஷியங்களை அடைந்து விடலாமென நினைப்பது தவறு என்று முன்னமேயே கூறியுள்ளேன். நமது வாலிபர்கள் கூட்டம் கூட்டமாக மாகாண முழுதும் சென்று, ஒவ்வொரு இடத்திலும் புத்தர் தமது கொள்கைகளைப் பரப்பியதுபோல் பிரசாரம் செய்தல் வேண்டும். பௌத்த சமயத்தார்கள் இவ்வாறான பிரசாரத்தினால்தான், கொஞ்ச காலத்திற்கெனினும், ஜாதிபேதத்தை நம் நாட்டில் விலக்கி வைத்தார்கள். பௌத்த சமயம் சிலகாரணங்களால் தவறியது. அதுமுதல் குருடர்கள்போல் தவிக்கலானோம். முதலாவது, பிரசாரத்தைப் பார்க்கிலும் பிரசாரம் புரிபவர்கள் தங்கள் வாழ்க்கையில் தங்கள் போதனைகளுக்கு ஏற்ப நடந்து கொள்ளுவதாகப் பிறர்க்குக் காண்பித்தல் வேண்டும். ஆதலால் இந்த சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபட்ட எல்லோருமே கூட்டங்களுக்கு விஜயம் செய்வதும், மேடைமேலேறிப் பேசுவதும்தான் தமது வேலையென முடிவுசெய்து கொள்ளாமல், இயக்கத்தின் கொள்கைகளை தாங்களே வாழ்க்கையில் அநுசரித்தல் வேண்டும்

என்றுகூறுகிறார். இதை நாம் ஆதரிக்கின்றோம். (2)

செலக்ட் கமிட்டி கூட்டங்கள்

தொழிலாளர் திருத்த மசோதா ஏகமனதாக அறிக்கை

நிதி இலாக்கா மெம்பர் மகாநாடு

புதியடெல்லி, பிப்; 16

இன்று தொழிலாளர் ஆக்ட் திருத்த மசோதா செலக்ட் கமிட்டி சர். பி. என். மித்ரா தொழிலாளர் நஷ்டஈடு மசோதாவை அரசாங்கம் முழுவதும் திருத்துவது பற்றி யோசித்து வருவதாயும், கால்வாய் தொழிலாளர்களையும் பற்றி ஆராய்வதாயும் கூறியமையால் ஏகமனதாக அறிக்கை செய்துள்ளதாய் தெரிகின்றது.

போல்ஷ்விக் மசோதா

போல்ஷ்விக் மசோதா கமிட்டி 45 நிமிடங்கள் இன்று மத்தியானம்கூடி வாதித்தது. சென்ற கூட்டத்தில் கூறிய யோசனையின்படி திருத்தப்பட்டது பற்றி முழுவதும் விவாதிக்கப் பட்டது. ஆனால், அதில் இன்னும் கையொப்பமிடப் படவில்லை. 2-ம் செக்சன் 3 (பி) உபவிதியில் பொருள்கள் சம்பந்தமாயும், வழக்கு விசாரணை அப்பீல் சம்பந்தமான 7,8 விதிகள் சம்பந்தமாயும் சில திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. சிலர் சந்தேகிக்கப்பட்டபடி மசோதாவின் கொள்கையை பிரட்டிவிடப்படவில்லை.

பாங்கி விசாரணை

இன்றுநிதிஇலாக்காசர்.ஜார்ஜ்காட்பிரி ஐரோப்பிய வியாபாரச சங்கப் பிரதிநிதி சர். ஜார்ஜ் காட்பிரியுடனும், இந்தியச் சங்கப்பிரதிநிதி திரு ஜி. டி. பிர்லாவுடனும் கூடி பாங்கி அமைப்பு விசாரணை அமைப்பைப்பற்றி விவாதித்தார். சர். ஜார்ஜ் சஸ்டர் இதற்குமுன் அரசியல் தலைவர்களுடன் மகாநாடு கூடி வாதித்தார். அதில் அவர்கள் அரசாங்கம் விசாரணை திட்டத்தின் போக்கை அறிய விரும்பினார்கள். சர். ஜார்ஜ் சஸ்டர் இன்று வியாபாரச் சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசித்தபின்பு ஓர் திட்டம் தயாரிப்பாரென்று எதிர்பார்க்கப்படுகின்றது. விரைவில் திரும்பவும் இது பற்றி அரசியல் தலைவர்களுடன் மகாநாடு கூடுவார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

டில்லியில் திரு. காந்தி வருகை

ந. டில்லி. பிப், 17.

சிந்து மாகாணத்திலிருந்து திரு, காந்தி இன்று டில்லி வந்து சேர்ந்தார். இவரை ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் பண்டித மோதிலால் நேரு மதன் மோகனமாளவியா, ஜவஹரலால் நேரு, மௌலானா அப்துல் காலம் அசாத் முதலானவர்கள் சென்று எதிர் கொண்டழைத்தனர். திரு: காந்தி பண்டித மோதிலால்நேருவுடன் சட்ட சபைத்தலைவர் கனம் வி. ஜே. படேல் விடுதிக்குச் சென்று விட்டார். காங்கிரஸ் காரியக் கமிட்டி யன்று கூடபோகிறது.

இந்து மததர்ம பரிபாலன விசாரணைக் கமிட்டி

அலகாபாத், பிப், 17.

அலகாபாத் நகரத்துடன் ஷ கமிட்டியார் தங்கள் விசாரணையை முடிவு செய்தார்கள். சர். சப்ரூ இதைப்பற்றி அபிப்பிராயம் கொடுக்கையில் இங்கிலாந்திலுள்ளபடிதர்மகமிஷனர்களைநியமித்து அவர்கள்மூலமாய் இந்துமத தர்ம பரிபாலனங்கள் நடைபெற்றால் நலமென்றும், இப்பொழுது உள்ள நிலைமை திருப்திகரமாயில்லையென்றும் கூறினர்.

வெளிநாட்டுச் செய்தி

இங்கிலாந்தில் இந்திய மாணவர்

பிரிட்டிஷ் கல்வி ஸ்தாபனங்களில் நிறத் தடை

லண்டன், பெப்ருவரி, 16

இன்று கௌவர் வீதியிலுள்ள இந்திய ஹாஸ்டலில் இலங்கை மாணவர் சங்கத்தார் ஒரு கூட்டம் கூடியதில் கீழ்நாட்டு மாணவருக்கு இங்கிலாந்து கல்வி ஸ்தாபனங்களிலும் சிறப்பாக வைத்தியக் கல்லூரிகளிலும், ஆஸ்பத்திரிகளிலும் இடம் கிடையாதபடி கஷ்டமேற்பட்டிருப்பதாலும்,வெள்ளையரல்லாத மணவர் விஷயமாக இந்த நாட்டில் துவேஷமிருப்பதாலும் ஐரோப்பா கண்டத்திலும் அமெரிக்காவிலும் இலங்கை மாணவர் சென்று கல்விபயிலுவதற்கு வசதிகள் அப்படிப்பட்ட கல்வியாலேற்படும் நன்மை அவ்விஷயமாய் இருக்கும் இலங்கையிலுமுள்ள இலங் மாணவர் சங்கத்தார் எடுத்து கொள்ள வேண்டிய நடவடிக்கை முதலிய விஷயங்களைப்பற்றி விசாரித்து அறிக்கை செய்வதற்கு ஒரு சப் கமிட்டி நியமிக்க வேண்டுமென்று தீர்மானித்தனர்.

லார்ட் பார்க்கன் ஹெட்

15,000 பவுன் சம்பளம்

லண்டன், பெப்ருவரி, 16

லார்ட் பர்க்கன் ஹெட்டிரெக்டர் லண்டன் அண்ட் டிரஸ்ட், லிமிட்டெட் கம்பனியின் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார். அவருக்கு வருடம் 16,000 பவுன் சம்பளம் கிடைக்கு மென்று தெரிகிறது.

போர்த்துக் கல்லில் சதி முயற்சி

வெடி குண்டுகள் பிடிப்பட்டன

லிஸ்பன், பெப்ருவரி, 16.

போர்த்துக்கல் சர்க்காருக்கு விரோதமாய் நடக்கும் சதி முயற்சியில் ராணுவத் தலைவர்கள் சேர்ந்து கொள்ள வேண்டுமென்று கேட்டு துண்டுப் பிரசுரங்களை ராணுவத்தாருக்கு கொடுத்த வெய்காலேமா என்றபெயருள்ள ஒரு என்ஜினியர் கைதுசெய்யப்பட்டிருக்கிறார். அவர் இருந்த இடத்தில் ஏராளமான வெடி குண்டுகள் பிடிபட்டிருக்கின்றன.

இங்கிலாந்தில் கலியாண வயது

16-வயதுக்கு உயர்த்த மசோதா

லண்டன், பிப்ர, 16

இங்கிலாந்திலே, 16 வயதுக்குட்பட்ட ஆண்களும் பெண்களும் கலியாணம் செய்யக் கூடாதென்று லார்ட் சபையில் லார்ட் பக்மாஸ்டர் ஒருமசோதாகொண்டு வந்திருந்தார். இதுவரையில் கிரேட் பிரிட்டனில் பெண்களுக்கு12வயதிலும், ஆண்களுக்கு 14வயதிலும் கலியாணம் செய்து கொள்ளலாமென்று சட்டமிருந்து வருகிறது. 1915முதல் 1926ம் வருடம் வரையில் இங்கு 200 பதினாறு வயதுக்குட்பட்ட கலியாணங்கள் நடந்துள்ளன.

அரசர் சுகநிலை

இன்று சிறிதுதூரம் நடந்தார்

லண்டன், பெப்ருவரி, 16

அரசர் சுகநிலை திருப்திகரமாய்அபிவிருத்தியடைந்து வருகிறது. நேற்று தம் மை இருப்பதற்காக தாச- இருக்கிற இடம்வரையில் நடந்து சென்றார்.

ஆப்கன் கலகம்

சில ஜாதிகள் சுயாதீனம்

மாஸ்கோ, பெப்ருவரி, 17

காபூலிலிருந்து வந்த ஒரு செய்தி கூறுவதாவது:— காந்தாரத்துக்கும், ஜலாலா பாத்துக்கு மிடையிலுள்ள ஜாதிக்காரர் தாங்கள்காபூலிலும்,காந்தாரத்திலுமுள்ள அதிகாரிகளுக்கு கட்டுப்படாத சுயதீன ஜாதியார் என்று வெளியிட்டிருக்கிறார்கள்.

ஜலாலாபாத்துக் கருகில் கூகியானி, ஷின்வாரி, மாமண்ட் வகுப்பாருக்குள் ஏற்கனவே சண்டை ஆரம்பித்துவிட்டது காபூலில் ஆகாரபதார்த்தங்கள் குறைவினால் பல இடங்களில் கொள்ளைகள் நடந்துவருகிறது.

நாதர்கான் எங்கே?

நைஸ், பிப்ர, 16

நாதர்கான் இங்கிருந்து ஒருவருக்கும் தெரியாமல் புறப்பட்டு போய் விட்டதாகவும், ஆப்கன் சிம்மாதனத்தை பிடிக்கும்படி அவர் ஆப்கானிஸ்தானத்துக்கும் போய் விட்டதாக நம்பப்படுகிறது.

அவர் சகோதரர்கூறும் விபரம்

லண்டன், பெப்ருவரி, 16

நாதர்கான் பெப்ருவரிமாதம் 8ந்தேதி செய்சரிவின்ட் கப்பலால் ஆப்கானிஸ்தானத்துக்குத் சென்று விட்டதாகவும் ஆப்கானிஸ்தானத்துக்கு சீர்திருத்தம் செய்யும்படி ஆப்கானிஸ்தானத்திலிருந்து அழைத் தனுப்பப்பட்டதால் அங்கு போய்ச்சேர்ந்ததாகவும் நாதாகனுடைய சகோதரர் கூறுகிறார்.

துருக்கி ஸ்தானாதிபதி கூறுவது

கான்ஸ்டான்டிநோப்பிள்,பெப்ருவரி,17

மாஸ்கோவில் துருக்கி ஸ்தானாதிபதியாயிருந்த வாலிஸ்பே ஒடஸ்ஸாவிலிருந்து இங்கு வந்திருக்கின்றார். ஆப்கானிஸ்தான் நிலைமையைப்பற்றி அவர் கூறியதாவது:—சோவியட் சர்க்காருக்கு கிடைத்திருக்கிற செய்திப்படி அமனுல்லாவே மீண்டும் ஆப்கன் அரசராவரென்று தோன்றுகிறது. கான்ஸ்டான்டிநோபிள் ராணுவக் கலாசாலையில் ராணுவப் பயிற்சி பெற்ற 60 ஆப்கன்ராணுவ உத்யோகஸ்தர்கள் பெப்ருவரி 15ந் தேதியே காந்தாரத்துக்கு புறப்பட்டுச் சென்று விட்டனர். அமனுல்லா அரசைக் கைப்பற்றுப்படி யுத்தத்திலே இந்த உத்தியோகஸ்தர்கள் அவருக்கு உதவிபுரிவார்களென்று தெரிகிறது என்று கூறினர்.

குளிர் விபத்து

ஐரோப்பாவில் ஜனங்கள் படும்பாடு

லண்டன், பெப்ருவரி, 17

ஐரோப்பாவில் இன்னும் குளிர் அதிகமாகவே இருந்து வருகிறது. சமீபத்தில் இந்த நிலைமையில் மாறுதல் ஏற்படாதென்று காலநிலை நிபுணர்கள் கூறுகின்றனர்.

புடாப் பெஸ்த்

ஹங்கரியில் பனியினால் ரயில் பாதைகள் தடைப்பட்டு நிற்கின்றன. இந்த நகரத்துக்கும்வியன்னாவுக்கும்போக்குவரவு நின்றுவிட்டது. ஹங்கேரியின் மத்திய பாகத்திலுள்ள ஸ்தல் வெய்சன்பர்க்கில் 2,000 பிரயாணிகள் போகிறதற்கு வழியில்லாமல் தவித்துக் கொண்டிருக்கின்றனர். இவ்விடத்திலுள்ள மான்களும், பட்சி பறவைகளும் பனியினால் மாண்டு போயின.

கோப்பனேகன்

டேனிஷ் கடல்களெல்லாம்பனியினால் உறைந்து கிடக்கிறது. கீழ்க்கரையோரமாய் அனேக கப்பல்கள் பனிக்குள் அகப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அந்தக்கப்பல்களில் சிலவற்றின் சுக்கான்களும், புராப்பெல்லர்களும் உடைந்துபோயின.

வார்சா

பலத்த பனிப்புயல்களினால் ரெயில் பாதையிலும், ரஸ்தாக்களிலும் போக்குவரவு தடைப்பட்டிருக்கிறது. லெம்பர்க்குக்கு எவ்விதப் போக்கு வரவு மின்றி தனிப்பட்டு நிற்கிறது. நிலக்கரி எண்ணெய் முதலிய சாதனங்கள் இல்லாமையால் பல தொழிற்சாலைகள் நின்று விட்டன.

மசிடோனியாவில் பெரு வெள்ளம்

எதன்ஸ், பெப்ருவரி, 17

கீழ் மசிடோனியாவில் வார்டார், ஸ்ட்ருமர் என்ற ஆறுகளில் வெள்ளப் பெருக்கெடுத்ததால் அபார சேதம் ஏற்பட்டிருக்கிறது. வெகுதூரம் வரையில் வெள்ளக்காடாய்க் கிடக்கிறது. அனேக ஜனங்கள்வீடுவாசலின்றி தவிக்கின்றனர் ஆடுமாடுகள் ஆழ்ந்து போயின. போக்குவரவு இலாக்கா மந்திரி வந்து இந்த இடங்களை வந்து பார்வையிட்டு ஜனங்களின் கஷ்ட நிவாரணத்துக்காக ஒரு நிதி சேகரிக்கும்படி முயற்சிக்கிறார்.

பாரசீகத்தில் கலகம்

டாஸ்ட் முகமது பிடிபட்டான்

டெஹிரான், பெப்ருவரி, 17

சர்க்கார் முயற்சியினால் பலுச்சி கலகக்காரர்தோற்கடிக்கப்பட்டுகலைத்துவிடப்பட்டனர். அவர்களுடைய தலைவனான டாஸ்ட் முகமதுகான் கைது செய்யப்பட்டு டஜ்டாப்புக்குக்கொண்டுபோகப்பட்டார். அங்கிருந்து அவர் தாம் இனி ஷாவுக்கு ராஜபக்திபுள்ளவரா யிருப்பதாகவும். ஆகையால் தன்னை மன்னித்து, தான் டெஹிரானுக்குப் போவதற்கு அனுமதி கொடுக்க வேண்டுமெனவும் ஷா அரசருக்கு மனுசெய்தார். ஷா அந்த மனுவை அங்கீகரித்திருக்கிறார்.

ஆஸ்பத்திரி திட்டம்

இரண்டு லட்சம் அநுமதி

செக்கந்தா பாத் 16

நைஜாம் அரசாங்கம் உஸ்மானியா ஹாஸ்பிட்டல் அபிவிருத்தித் திட்டத்திற்கு அநுமதித்துள்ளது.

தமிழ் நாட்டு நிகழ்ச்சிகள்.

காரைக்கேணி

சுகாதார சிசுவாரக்கொண்டாட்டம் திருமங்கலம் தாலுகா காரைக்கேணி கிராமத்தில் 11-2-29ந் தேதியில் திருமங்கலம் ரேஞ்சு ஹெல்த் இன்ஸ்பெக்டர் கனம் கே. ராகவமேனன் அவர்கள் தன் முயற்சியின் பேரிலும், கனம் வி. கல்யாண சுந்தரமய்யா அவர்களின் ஊக்கத்தின் பேரிலும் கல்பட்டி பிர்கா ரெவினியூ இன்ஸ்பெக்டர் கனம் லெட்சுமண பிள்ளை அவர்கள் தலைமையின் கீழ் தேசிய சுகாதார சிசுவாரக் கொண்டாட்டம் வெகு சிறப்புடன் நடைபெற்றது. இக் கொண்டாட்டத்திற்குப் பக்கத்திலுள்ள நல்லயதேவன்பட்டி, முத்தம்பட்டி, கொல்ல வீரம்பட்டி, வில்லூர் கிராம பாடசாலை மாணவர்களும் உபாத்தியாயர்களும் கிராம பெரியோர் வாலிபர்களும் ஊக்கமாக வந்திருந்தார்கள். ஆதிதிராவிட மாணவர்களும் சாதி பேதமின்றி கலந்திருந்தார்கள். சாலையில் பள்ளி மாணவர்களின் பந்தய விளையாட்டும் சிசுக்களுக்கும் ஏழைகளுக்கும் ஆதிதிராவிட குழந்தைகளுக்கும் சட்டைகள் பரிசளிக்கப்பட்டது. மத்தியானம் அயலூர்க் குழந்தைகள் பெரியோர் ஆதிதிராவிடர்களுக்கு சமபந்தி போசனம்செய்விக்கப்பட்டது. மாலையில் சிறுவர் சிறுமியர்களின் சம்பாஷணைகளும் நாடகங்களுக்கும் அதிஅற்புதமாய் நடித்துக்காட்டப்பட்ட பின் பந்தயத்தில் ஜெயித்தவர்களுக்குபித்தளை பாத்திரங்கள் பரிசு கொடுத்து இரவில் புகைப்படம் காட்டி கூட்டத்திற்கு சந்தனம் தாம்பூலம் பிஸ்கட் கொடுத்து இவ்வூர் கிராம முன்சீப் கிராமத்தைச் சுத்தமாய் வைத்திருந்ததை முன்னிட்டு ஒரு பித்தளை வெத்திலைபாக்கு வைக்கும் பெட்டி அவருக்குஇனும் கொடுத்த பின்னுல் முடிவடைந்தது என்று திரு.கே. ஏ. முத்துசாமி நாயக்கர் எழுதுகிறுர்.

திருப்பத்தூர்.

குழந்தைகளின் சமரக்ஷணை சங்கம். 5-2-29ல் திருப்பத்தூர் கோஷா ஆஸ்பத்திரி எதிரில் மாலை 6-மணிக்கு பெரியதோர் கூட்டம் கூடியிருந்தது. (கலக்டர்ஸ்) மிஸஸ். டி. டபிள்யூ. டாட்வெல் அக்ராசனத்தின் கீழ் வேலூர் மிஸ்ஸஸ். ஆதிசேஷையா, குழந்தைகளின் பாதுகாப்பு விஷயத்தில் சுமார் 1-மணி நேரம் பிரசங்கித்தனர். இன்னும் பல கனவான்கள் பிரசங்கம் செய்தனர்.

அறந்தாங்கி

பார்ப்பனரல்லாதார் சுயமரியாதைச் சங்கம்:—மேற்படி சங்கத்தின் ஆதரவில் திருவாளர் மு. நாகப்ப செட்டியாரவர்களின் மடத்துக்கு எதிரில் மாலை 7-மணிக்கு திரு. ஞான முத்துப் பிள்ளையவர்களின் தலைமையின் கீழ் சுமார் 300 ஜனங்கள் வரைக் கூடியிருந்த பொதுக் கூட்டத்தில் பட்டுக்கோட்டை தமிழ்ப்பண்டிதர் திரு. திருஞான சம்பந்த முதலியார் அவர்களால் சுயமரியாதையை யாவரும் கைக்கொள்ளுமாறு ஓர் சொற்பொழிவு நிகழ்த்தினர்கள். அதனுல் அன்றுகூடியிருந்த ஜனங்களுக்கு என்றுமில்லாதவுணர்ச்சி உண்டாகியிருக்கிறது என்று ஒரு நிருபர் எழுதுகிறுர்.

"முன்னேற்றம்"

இஃது

சுயமரியாதைக்கொள்கையை ஆயுதமாகக்கொண்டு கடவுள், மதம், வேதம், புராணம், ஜாதி என்பவைகளின் பேரால் நடைபெறும் மூடப் பழக்கவழக்கங்களையும் அறிவுத்தடைகளையும் சுயமரியாதையற்ற தன்மைகளையும் அடியோடு ஒழிக்க உறுதிகொண்டு சிங்கப்பூரிலிருந்து வெளியாகும் ஒரு தமிழ் வாரப்பத்திரிகை.

இதன் ஆசிரியர்:-வே. சி. நாராயணசாமி.

வெளியிடுபவர்:-ஜி. சாரங்கபாணி.

இதன் சந்தா ரூ. 4-0-0

அல்லது டாலர் 2-21.

விலாசம்:-மானேஜர், "முன்னேற்றம்",

152, செலிகிரோட், சிங்கப்பூர்.

(378)

கோனேதெராபி

எல்லாவித மேக வெட்டை ரோகங்களுக்கும் சிறந்த மருந்து. அக்கினிமயமான எரிச்சலையும் 24 மணி நேரத்துக்குள் நிறுத்திவிடுகிறது. வியாதியை ஒரு வாரத்துக்குள் குணமாக்குகிறது. ஒரு புட்டி விலை ரூ. 2-8-0. 3 புட்டிகளுக்கு ரூ. 6-12-0. வேண்டுவோருக்கு காட்லாக் இனமாய் அனுப்பப்படும்.

Ophelene Laboratory,

383 B) 6, Kalakar Street, Calcutta

DIAMOND EXTRA.

(REGISTERED)

புது வைரம்.

இது வைரத்தைப் போலவே பூசிப்பும், ஜொலிப்பும் நீலம், பச்சை, சிகப்பு முதலான பிரகாசமுள்ளது. வைரத்தைத் தோற்கடிக்கும் குணமுள்ளது. புஷ்பராகமும் கிடைக்கும். ரெடிமேட் நகைகள் கிடைக்கும், பவுன் தங்கத்திற்கு உத்திரவாதம். இவிடேஷன் பச்சை, நீலம், கெம்பு, அலக்ஜான்ரா, டர்மலை முதலான இங்கிலீஷ் கலர்கற்கள் கிடைக்கும்.

விலைகளின் விபரம்:—

கலர்கள் கியாரட்டு 1-க்கு விலை ரூ. 2—0—0 தான்.

கியாரட்டு 1-க்கு சயிஸ் விபரம்.	புது வைரம் விலை.	புஷ்பராகம் விலை.
10 முதல் 15 வரையில்	4—0—0.	5—0—0.
4 முதல் 8 வரையில்	3—0—0.	4—8—0.
1 முதல் 3 வரையில்	2—0—0.	4—8—0.
1-க்கு மேல் சயிஸ்	1—8—0.	4—8—0.

கமலா அண்ட் கம்பெனி,

(399 கி) 69, நாராயண முதலி தெருவு, சென்னை.

திருவாரூர்

சித்த வைத்தியாபிவிர்த்தி சங்கம்

நடமாடுங் கோவில் திருப்பணி திருவாரூரில்

சித்த வைத்தியாலயம் கட்டுவதற்கு பொருளுதவி செய்யுங்கள். இது தான் ஏழை மக்களுக்குப் பேருதவியாகும்.

உங்களுடைய உதவியை நம்பி நாளது 17, 18-ந் தேதிகளில் செங்கற்பட்டில் நடக்கும் மகாநாட்டுப் பந்தலில் யாசிக்க வருகிறேன்.

உங்கள் ஊழியன்:—

ஜீ. கண்ணுசாமி,
காரியதரிசி,
சித்த வைத்தியாபிவிர்த்தி சங்கம்,
முனிசிபல் தமிழ் வைத்திய ஊழியம்,
திருவாரூர்.

(400)

இனி நரையே இல்லை!

மாஜிக் கூந்தல் தைலம்

நரையைத் தடுக்கும் மருந்து

மயிரின் நிறமே வயதுக்கு அறிகுறி. இப்போதே மயிருக்கு இயற்கை நிறம் ஏற்படுத்திக்கொள்ளுங்கள். அங்குமிங்கும் நரைக்கும்வரை காலதாமதம் செய்யாதீர்கள். நம்மிந்தியாவில் இதுதான் முதல்தடவையாய் தயார் செய்யப்பட்டுள்ளது.

மாஜிக் கூந்தல் வளர் தைலம் சாஸ்திர ரீதியாய்ச் செய்யப்பட்டிருக்கிறது. இது சாயமல்ல. இதில் வருணப்பொருள் எதுவுமில்லை. கை, தலை, துணி முதலியனவற்றில் இதனுல் கறை ஏற்படாது.

மாஜிக் கூந்தல் தைலம் மயிர் விழுவதை தடுக்கும். பரட்டை, நரை, பிசுபிசுப்பு, இரட்டை மயிர் விழுதல், இளநரை முதலிய மயிர் ரோகங்களை தீர்க்கும். பேன், ஈர் ஆகிய தலை கிருமிகளை போக்கும்.

மாஜிக் தைலம் எல்லாவித மயிர் ரோகங்களையும் போக்கடிக்கும். ஒரு புட்டி தைலம் ரூ. 2. உடனே வாங்கி உபயோகியுங்கள். மாஜிக்போலவே இது ஆச்சரியகரமான குணம் கொடுக்கிறது. எங்கும் கிடைக்கும். தபால்கூலி வேறு. சென்னை மாகாணத்துக்கு சோல் ஏஜெண்டுகள்:—

ராஜாராம் அண்ட் கோ.,

(350) 27, சின்னத்தம்பி தெரு, ஜார்ஜ்டவுன், சென்னை.

சுக்ல வருஷத்திய

நேத்திர ஜீவ நக்ஷத்திராதி

சாந்திர சௌரமான சர்வமுகூர்த்த

ஆனந்தபோதினி பஞ்சாங்கம்.

விலை 1-க்கு அணு 2.
6-க்கு அ. 8.
12-க்கு அ. 14

எல்லா ஊர் புஸ்தக வியாபாரிகளிடத்திலும் கிடைக்கும்.

இதனோடு நமது புஸ்தகங்களும் கிடைக்கும்.

"ஆனந்தபோதினி" ஆபீஸ், மதராஸ்.

(115 பி)



"குறித்த தவணையில் கிடைக்க வேண்டுமானுல்" கீழே குறிப்பிட்ட விலாசத்துக்குப் போங்கள். மூக்கு திருகு முதற்கொண்டு எவ்வளவு விலை உயர்ந்த நகை வேண்டுமானுலும், அசல் சவரப் பொன்னுக்கும் சீமை வெள்ளிக்கும் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும். கை இருப்பில் அநேக நகைகள் இருக்கிறது.

உம்முடி ராமய்ய செட்டி, குருசாமி செட்டி கம்பெனி,

நகை தொழிலாளர்கள், 25, சைனுபஜார் ரோட், மதராஸ்.

தந்தி:—"உம்மிடியார்" டெலிபோன் 2802.

(118—எ.)

சென்னை சர்க்கார்

கலால் & சுகாதார மந்திரி அவர்களால் மிகவும் நல்ல மருந்துகள் என்று நற்சாக்ஷி பத்திரமும் தங்கமெடல் பரிசும் (30-10-28)ல்

தண்டபாணி வைத்தியசாலைக்கு

கொடுக்கப்பட்டிருப்பதை கவனியுங்கள்.

விவசாயம் & கைத்தொழில் காட்சி

ஏழாவது தென்னுற்காடு ஜில்லா கூட்டுறவு மகாநாடு.

விருத்தாசலம் 1928-ஞு அக்டோபர்மீ 30௳.

காக்ஷிக்கு வைக்கப்பட்ட மருந்துகளின் பெயர்கள்.	தண்டபாணி வைத்தியசாலையின் மருந்துகளில் முக்கியமான, அமிர்தம், அமிர்தாசம், தங்கரேக் குளிகை, பிரமேக நிவாரணி, மகாமன்மத சிந்தாமணி லேகியம், பற்பொடி ஆகிய இவைகள்.
காக்ஷி மருந்துகள் அனுப்பியவர் பெயர்.	ம-ா-ா-ஸ்ரீ என். தண்டபாணி பிள்ளை, 292, சைனு பஜார், மதராஸ்.
மதிப்பு.	மிகவும் நல்ல மருந்துகள் என்று தங்க பதக்கம் (மெடல்) பரிசளிக்கப்பட்டது.
சேர்மென் எம். ஜி. பார்த்தசாரதி, வரவேற்புக் கமிட்டி.	எஸ். முத்தையா முதலியார், கலால் & சுகாதாரமந்திரி மதராஸ் கவர்ன்மெண்டு.

அமிர்தம்

குடலைப்பற்றிய எல்லாவித வியாதிகளையும் போக்கும் தேவாமிர்தம்.

இம்மருந்து ஆபீசர்களுக்கும், அதிகமாய் உட்கார்ந்து வேலை செய்பவர்களுக்கும் முக்கியமானது. அன்றாடம் குடலைச் சுத்தம் செய்து மலத்தைக் கிரமமாய்ப் பிரவர்த்தி செய்து மலம் சிறு நீர் வழியாய் தேகத்திலுள்ள சகல வியாதிகளையும் போக்கும். மலச் சிக்கல்தான் எல்லா வியாதிக்கும் காரணம். விபரம் பெரிய கேட்லாக்கில் பார்க்கவும்.

24-நாள் உபயோகப்படும் ஒரு சேர் டின் விலை ரூ. 2.

தங்கரேக் குளிகை

தாதுபுஷ்டிக்கு நிகரற்ற மருந்து.

இதில் உயர்ந்த அபரஞ்சித தங்கரேக், கஸ்தூரி, குங்குமப்பூ, கோரோசனை, அரிய மூலிகைகள் சேர்த்துச் செய்யப்பட்டிருக்கிறது. உடைந்த தாதைக் கட்டி நரம்புக்கு முறுக்கேற்றி இழந்த பலத்தையும் நீடித்த போக சக்தியையும் கொடுக்கக்கூடியது. நமது தங்கரேக் குளிகையே ஒரு தரம் பரீட்சித்துப் பாருங்கள்.

100-குளிகை ரூ. 15. 50-குளிகை ரூ. 8-8. 25-குளிகை ரூ. 5.

அமிர்தாசம்

சர்வ நோய்களுக்கும் வலிகளுக்கும் உள்ளுக்கும் மேலுக்கும் உபயோகிக்கலாம். துளிக்கணக்கில் உபயோகிக்க மணிக்கணக்கில் சுகம் கிடைக்கும். எல்லா ஊர்க் கடைகளிலும் கிடைக்கும். புட்டி 1-க்கு ரூ. 1-8-0. வியாபாரிகளுக்கு நல்ல கமிஷன் உண்டு.

பிரமேக நிவாரணி

உடனே குணந்தரும்.

எவ்வளவு காலம் நீடித்த வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு, மஞ்சள் வெள்ளை, தந்தி வெள்ளை வியாதிகளையும் குணப்படுத்தக்கூடியது.

9-வேளை மருந்து 1-அவுன்சு புட்டி 1-க்கு ரூ. 2-4. வி. பி. வேறு.

மகா மன்மத சிந்தாமணி லேகியம்.

தேக திடம், தாதுபுஷ்டி, ஜீரணசக்தி, புத்திக்கூர்மை, பரமானந்த சுருசுருப்பு முதலியவைகளையும் அளிக்கும். ஒரு சேர் டின் ஒரு மண்டலம் உபயோகிக்கலாம். முதல் தெ. ரூ. 3. 2-தெ. ரூ. 2—4—0.

தண்டபாணி பற்பொடி.

அழகும் குணமும் மணமும் பொருந்தியது: எல்லாவித பல்நோய்களையும் குணமாக்கி பற்களை வெண்மையாகவும் கெட்டியாகவும் வைத்திருக்கும். டின் 1-க்கு 0—2—0.

சகல நோய்களுக்கும் ஸ்நானபான அநுபான பத்திய முறைகளுடன் கூடிய மருந்துகளும், பல நற்சாட்சிப் பத்திரங்களும் அடங்கிய விபரமான பெரிய கேட்லாக் கேட்போருக்கு இனமாய் அனுப்பப்படும்.

தண்டபாணி வைத்தியசாலை,

292, சைனுபஜார், மதராஸ்.

நமது வெளியூர் சோல் ஏஜண்டுகளின் விபரம்.

பர்மாவிற்கு:—மு. சு. வடிவேல் பிள்ளை,
ஸ்ரீ காந்தி கதர் நிலயம், 91, மொகல் வீதி, இரங்கூன்.

தஞ்சை ஜில்லாவிற்கு:—எம். கல்யாணசுந்தர முதலியார்,
கதர்ஸ்டோர், கடைத்தெரு, மாயவரம்.

திருச்சி ஜில்லாவிற்கு:—கி. ஆ. பெ. விஸ்வநாத பிள்ளை,
புகையிலை மண்டி, 54, தஞ்சைரோடு, திருச்சினுப்பள்ளி.

மதுரை ஜில்லாவிற்கு:—வி. முத்துராமலிங்கம் பிள்ளை,
கோவில்தெரு, திண்டுக்கல்.

தென் ஆற்காட்டிற்கு:—வி. கே. எஸ். அய்யர் & Co.,
சிவபுரி புகையிலைமண்டி, மேலவீதி, சிதம்பரம்.

(138)

நீதிமன்ற நிகழ்வு.

அரிசி திருடிய வழக்கு

எதிரிக்கு 2 வருடக்கடுங்காவல்

சென்னை, பிப் 15

சென்னை வடக்கு பீச்ரோட்டில் இம்மாதம் 7ம் தேதியன்று ஒரு வண்டியிலுள்ள அரிசி மூட்டையை [illegible]

உற்சவத்தில் திருடிய வழக்கு

எதிரி தண்டிக்கப்பட்டான்

சென்னை, பிப்ரவரி 15

[illegible] 6-மாதங்கள் வரை கடுங்காவல் தண்டனையனுபவிக்க வேண்டுமென்றும் அதன் பின்னர் இரண்டு வருடங்கள் வரை தன்னிருப்பிடத்தைப் போலீசாருக்கறிவித்துக் கொண்டிருக்கவேண்டு மென்றும் உத்தரவிட்டார்.

மௌண்ட்ரோடில் காலித்தனம்

எதிரிகளுக்கு அபராதம்

சென்னை, பிப்ரவரி, 15

ரியூபென் என்னும் ரிக்ஷா கூலியும், பெருமாள் என்னும் டிரஸ்ஸிங்பாயும், சென்ற நவம்பர் மாதம் 8ந்தேதி நன்றுக்குடித்துவிட்டு மௌண்ட்ரோடில் வேலாயுதம் என்பவரை நன்றாக அடித்துவிட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டு 3வது பிரஸிடென்ஸி மாஜிஸ்டிரேட் முன்னர் விசாரணைக்கு வந்ததில், மாஜிஸ்டிரேட் அவர்கள் முதல் எதிரிக்கு இ. பி. கோ. 323வது செக்ஷன்படியும், 2வது எதிரியை 324வது செக்ஷன்படியும், குற்றவாளிகளெனக்கண்டுமுதல் எதிரிக்கு ரூ.10 அபாராதமும் 2வது எதிரிக்கு ரூபா 15ம் அபராதமளிக்க வேண்டுமென்றும், அபராதம் கொடுக்கத் தவறினால், ஒவ்வொருவரும் ஒரு மாதக் கடுங்காவல் தண்டனை அனுபவிக்க வேண்டுமென்றும் ஆறு மாதங்கள் வரை நன்னடத்தை ஜாமீன் இருவரும் கொடுக்க வேண்டுமென்றும் தண்டனை அளித்துவிட்டு, அபராதத்தொகையளிக்கப்பட்டால் அதில் 10 ரூபாய் அடிபட்ட வேலாயுதத்துக்கு அளித்து விடவேண்டுமென்றும் உத்தரவிட்டார்.

சர்க்கார் ராஜத்துவேஷ வழக்கு

வேறு கோர்ட்டுக்கு மாற்ற மனு

கல்கத்தாவைச் சேர்ந்த முகுந்தலால் சர்க்கார் மீது ரெயில்வேவேலை நிறுத்தத்தின் போது இராஜத்துவேஷமாகப்பேசியதாகக்குற்றம் சாட்டப்பட்டுள்ள வழக்கை இப்போது விசாரிக்கும் ஸ்பெஷல் மாஜிஸ்டிரேட் அதே ரயில்வே வேலை நிறுத்தத்தில் சதியாலோசனை செய்ததாகக் கொண்டுவரப்பட்ட சதியாலோசனை வழக்கைவிசாரித்துக்கொண்டிருப்பதால் இவ்வழக்கில் சரியான நீதி வழங்க இயலாதாகையாலும்இன்னும் பத்திரங்களும், சாட்சிகளும் விசாரிக்கவேண்டியிருத்தலாலும் இவ்வழக்கை வேறெந்த கோர்ட்டுக்காவது மாற்றவேண்டுமென்றும் கொடுக்கப்பட்டிருந்த மனுவை ஹைக் கோர்ட்டில் ஜஸ்டிஸ் ஆட்ஜர்ஸ் நேற்று ஆலோசனைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது. திரு. சர்க்கார் தரப்பில் திரு. வி. புரூக் எல்லியட் மேற்கண்ட காரணங்களை எடுத்துக்கூறினர். பப்ளிக் பிராஸிகியூடர், திரு. எல். எச். பிரூன் மனுவை எதிர்த்துப்பேசினர். கனம் ஜட்ஜ் தம்முடைய தீர்ப்பை ஒதுக்கி வைத்துள்ளார்.

நன்றி மறந்த பாதகன் மீது வழக்கு

எதிரிக்கு 100 ரூபாய் ஜாமீன்

சென்னை, பிப்ரவரி, 14

வேலூர்விடுதலைபெற்றகைதிகள் சகாய சங்கக்காரியதரிசியான திரு வாஜ் என்பான் அருணசல ஆசாரி தெருவிருக்கும் வீட்டிற்கு, திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்தபடித்த மனிதனை அருணசல தேவனென்பவன் சென்ற நவம்பர்மாதக் கடைசியில் விருந்தாளியாக வந்திருந்தான். திரு வாஜ் சென்னைக்குப்போகநேர்ந்த சமயத்து மேற்கண்ட அருணசல தேவனென்பவன் திருவாஜுடையவும், அவரின் நண்பர்களுடையவும், சாமான்களானபுத்தகங்கள், கைக் கெடியாரம், இதர வஸ்துக்கள் சில ஆகியவைகளைத் திருடிக் கொண்டனன். எனவே, பிராதின் பேரில் வழக்குக் கொண்டுவரப்பட்டதில் தான் திருடியது உண்மை தானென்றும் தன் மீது கோர்ட்டார் இரக்கம் காட்ட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டான். கனம் பிரதம பிரஸிடென்ஸி மாஜிஸ்டிரேட் அவர்கள் எதிரி செய்துள்ள முதற் குற்றம் இதுவே யாதலால் 100 ரூபாய்க்கு ஒரு சொந்த ஜாமீனும் 6-மாதங்கள் வரை நன்டைக்கை ஜாமீனும் அவன் அளிக்கவேண்டுமென்று உத்தரவிட்டார்.

அடித்து இம்சை செய்தவழக்கு

ஒரு தச்சனுக்கு 30 ரூ. அபராதம்

சென்னை, பிப்ரவரி 14

சென்னை கோட்டையில் தச்சவேலை செய்யும் சையத் உசேன் என்பவன் அங்கேயே வேலை செய்யும் இதர தச்சனை அப்பாஸ் உசேனை சிறிதுநேரம் உளிதரவேண்டுமென்று கேட்டான். அதற்கு அவன் மறுத்துவிட்டான். மறுபடியும் முன்னவன் கேட்டுக்கொண்டே யிருக்கவே பின்னவனுக்குக் கோபம் வந்து ரம்பத்தை எடுத்து அடித்து விடவே அது முன்னவனின் மண்டையில் பலத்தகாயமுண்டுபண்ணிவிட்டது. உடனே இராணுவத்தார்கள் காயம்பட்டவனுக்கு முதற் சிகிச்சைகள் செய்து ஜெனரல் ஆஸ்பத்திரிக்குஅனுப்பினர். பின்னர் அடித்த எதிரி மீது சென்னை ஜார்ஜ் டவுன் இரண்டாவது பிரஸிடென்ஸி மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் வழக்குக் கொண்டுவரப்பட்டதில் கனம் மாஜிஸ்டிரேட் ஜனுப் தமீசுத்தின் குவாதிரி சாஹிப் அவர்கள் எதிரி குற்றவாளியெனக் கண்டு ரூபாய் 30 அபராதம் விதித்து அபராதம் செலுத்தப்பட்டால் அத்தொகையில் 15-ரூபாய் அடிபட்டவனுக்குக் கொடுக்கவேண்டுமென்று உத்தரவிட்டார்.

அனுபதிஙலுக்கு 175-ரூபாய் அபராதம்

செங்கோட்டை, பிப்ர, 14

தென்காசித் தாலுக்கா வல்லம் கிராமத்தில்வெங்கடாசலமூப்பன் மலையாளத்திலுள்ள சந்தைகளில் வாழைக்காய் முதலிய சாமான்கள் வாங்கி, தென் காசி முதலிய ஊர்களிலுள்ள வியாபாரிகளிடம் விற்பனை செய்து வருவது வழக்கம். இந்த மனிதன் பல தடவைகளில் தீர்வைக்குரிய சாமான்கள் கொண்டு வந்தால் (கஸ்டம்ஸ் ஹௌஸில்) தீர்வை கொடுத்து போயிருப்பதாயும் தெரிகிறது. ஆனால், இந்த மாதம் வண்டியில் வாழைக்காய்களை கொண்டு திருட்டுத்தனமாய் மறைத்து வைத்திருந்ததாக 325 தேங்காயை செங்கோட்டை குண்டார் சவுக்கையிலுள்ள உத்தியோகஸ்தர்கள் கண்டு பிடித்து குற்றம் சாட்டி, கொல்லம் டிவிஷன் உதவிக லால் கமிஷனர் செங்கோட்டையில் விசாரணை செய்ததில் தேங்காய் 325 திருட்டுத்தனமாய் கொண்டுபோக முயற்சித்த குற்றத்திற்காக அபராதம்ரூ.175-செலுத்தவேண்டுமென்றும், அபராதத் தொகைசெலுத்த தவறினல், வண்டியும் மாடுகளும் அதிலுள்ள சகல சாமான்களு ஏலம் போட்டு பணத்தை அபராதத் தொகையாக ஈடு செய்யப்படுமென்றும் தீர்ப்பளித்திருக்கின்றர். இது கொடுமையான தண்டனை யென இவ்விடத்திய ஜனங்களால் கருதப்படுகின்றது.

இவ்வழக்கை நியாயஸ்தலமான மாஜிஸ்திரேட் கோர்ட்டில் விசாரணைக்குக் கொண்டுபோய்பிரதிவாதியைசிட்சை செய்தாலும்நியாய மென்று சொல்லலாம். அதுவல்லாமல் வாதியே தீர்ப்புச் சொல்லும் ஜட்ஜாக ஆய்விட்டால் நியாயம் எப்படிகிடைக்கும் என்று "கோவிந்தன்" எழுதுகிறர்.

பிரிட்டிஷ் இந்திய ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி லிமிடெட்

இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது

மதராஸிலிருந்து ரெங்கூனுக்கு கப்பல் பிரயாணம்

(காலை 10-மணிக்கு)

" டயிரியா 22 2 2[illegible]

மதராஸிலிருந்து ஸ்ட்ரெயிட்ஸுக்கு கப்பல் பிரயாணம்

(மாலை 4-மணிக்கு)

ரோண 20 2 29.

இதர விவரங்களுக்கு கீழ்கண்ட விலாசத்துக்கு எழுதவும்

பின்னி & கோ, மதராஸ் லிமிடெட்

(4) ஏஜன்ட்ஸ் மதராஸ்

ஓம் வைத்தியவித்தை

வாசிப்பதற்கு இனிமையாயும், நற்புத்தி புகட்டக்கூடியதுமான இப்புத்தகம் தேவையானவர்கள் இன்றைக்கே தருவித்து வாசியுங்கள்.

ராஜ வைத்திய நாராயணஜீ கேசவஜீ, 1/94, சைனபஜார் ரோட், சென்னை.

(274)

குடி அரசு பத்திரிகை

நமது திராவிடன் ஆபீஸில் கிடைக்கும். விலை 0 1 0

வியாபார விஷயங்கள்.

நாணய மாற்றல்.

(18—2—29)

	விற்கிற விலை.	வாங்குகிற விலை
லண்டன் மேல் தந்தி	17 31/32 பெ.	
லண்டன் மேல் தரிசனம் 18 பெ.		18 3/32
லண்டன் மேல் 3 மாத தவணை உண்டி	18 11/32 டெ,	
லண்டன் மேல் 6 மாத தவணை உண்டி	18 19/32 டெ.	

பிரான்ஸுமேல் தரிசனம்— ரூ. 100-க்கு 925 ப்ராக்

ஜெர்மனி மேல் தெரிசனம் ரூ. 100-க்கு 151 மார்க்கு

பெல்ஜியம் மேல் தரிசனம் ரூ. 100-க்கு 255 ப்ராங்

அமெரிக்கா மேல் தரிசனம்— 100 பொன் டாலருக்கு ரூ. 276 ரூ. 272

பினங், சிங்கப்பூர் மேல் தரிசனம்— 100 டாலருக்கு ரூ. 160 ரூ. 155

ஹாங்காங்மேல் தந்தி அல்லது தரிசு 100 டாலருக்கு ரூ. 140

ஷாங்காய் மேல் தந்தி அல்லது தரிசன- 100 டயிலுக்கு ரூ. 180

ஜப்பான் மேல் தந்தி அல்லது தரிசனம்- 100 பென்னுக்கு ரூ. 126

ஜப்பான் மேல் 60 நாள் டி. பி. 100 பென்னுக்கு ரூ. 120

ஜாவாமேல் தந்தி அல்லது தரிசனம்— ரூ. 100-க்கு 90 கில்டர் 92 கில்டர்

இம்பீரியல் பாங்க் ஆப் இந்தியா நடப்பு வட்டி— 8%

பாங்க் ஆப் இங்கிலாந்து வட்டி 5½%

சர்க்கார் பத்திரங்கள்.

3% இந்தியா சர்க்கார் பத்திரம் ரூ. 72-2 முதல் 73-2

4% கடன் (1960-70 ரூ. 84-2 ரூ. 85-2

5% யுத்தக் கடன் (1929-47) ரூ. 99-2 ரூ. 100-2

% கடன் (1945-55) ரூ. 103-12 ரூ. 104-12

5% இந்திய சர்க்கார் ... ... வாண்டுகள் 1933 ... ... ரூ. 100-8 முதல் 101 8

6% கடன் 1930 ரூ. 100-14 ரூ. 101-14

6% இந்தி சர்க்கார் பாண்டுகள் 1931 ரூ. 101-15 ரூ. 102-15

6% கடன் 1932 ரூ. 102-15 ரூ. 103 15

தீர்மானம்.

6¼% மைசூர் சர்க்கார் கடன் (1940) ரூ. 112 முதல் ரூ. 112 8

6½% மைசூர் சர்க்கார் கடன் (1941-51)ரூ.116 ரூ.116-8

7% மைசூர் சர்க்கார் கடன் (1931) ரூ. ரூ. 104-8

இம்பீரியல் பாங்கி ஆப் இந்தியா (ரூ. 500) ரூ. 1425 முதல் ரூ. 1435

இம்பீரியல் பாங்கி ஆப் இந்தியா ரூ. (125) ரூ. 350-8 ரூ. 355-

யாவணக்கால் வியாதிக்கு

திருவாரூர், டாக்டர் ஜீ. கண்ணுசாமி பிள்ளையவர்களின் மருந்து நிகரற்றது.

ஒரு முறை மருந்து ரூ. 15—0—0

ஷன்முகானந்த வைத்தியசாலை.

(228எ) திருவாரூர்

ஆனந்தபோதினி

இனிய தமிழில் வெளிவரும் "மாதப் பத்திரிகை" தமிழ் நாட்டில் வெளிவரும் மாதசஞ்சிகைகளில் முதன்மை பெற்றது; 20,000 சந்தாதாரர்களை புடையது; கல்வியிற் சிறந்தோர் பலரால் எழுதப்பட்டு வரும் உயர்ந்த வியாசங்களைக் கொண்டு வெளிவருவது; எம்மதத்தார்க்கும் சம்மதமான பொது தன்மைகளைப் போதிப்பது; 64-பக்கங் கொண்டது; முகப்பு ஆப்டோன் படத்துடனும், வயன் பிளாக்குகளுடனும் மாதந்தோறும் குறித்ததேதி தவறாமல் வெளியாகிப் பலருக்கும் ஆனந்தத்தை யூட்டி வருவது; மிகக் குறைந்த சந்தாத் தொகையுள்ளது.

(மாதிரி காபி இனும்)

வருட சந்தா தபாற்கூலி யுள்பட உள்நாடுகளுக்கு ரூ. 1 வெளி நாடுகளுக்கு ரூ. 1—1—

விலாசம்:—

ஆனந்தபோதினி ஆபீஸ்,

வெங்கடேச மேஸ்திரி வீதி, மதருஸ்.

115

கப்பல் விஷயங்கள்.

துறைமுகத்திலிருக்கும் கப்பல்கள்.

14—2—29

பெயர்	போகும் ஊர்	புறப்படுந்தேதி பிப்ரவரி மாதம்
சாமேரியா	ரங்கூன்	21—
நோவரா	கல்கத்தா	—
டேரியா	ரங்கூன்	22—
கோஹினூர்	பம்பாய்	—
எடன் மார்சேல் ஹாவிர் டன்கர்க் ஆண்ட்வெர்ப் ஹாம்பர்க்		—
டம்பா	நியூயார்க், போஸ்டன் பிலடெல்பியா	18—
ஸிடி ஆப் பார்க	லண்டன்	—
ஸிடி ஆப் கொரிந்த்	மார்சேல்	—
ரோண	பினங்கு சிங்கப்பூர்	20—

எதிர் பார்க்கப்படும் கப்பல்கள்.

பெயர்	போகும் ஊர்	எதிர்பார்க்கப்படும் தேதி பிப்ரவரி மாதம்
கில்ட்ரெக்ட்	ஆண்ட்வொப், ராட்டர்டாம் ஹாம்பர்க் ப்ரமன்	
க்ளான் மெக்கல்வார்	லண்டன் ஹாம்பர்க் டன்கர்க்	—
ஸிடி ஆப் டன்டி	கல்கத்தா	
	நியூயார்க், பிலடெல்பியா போஸ்டன்	—
ஓர்மாகா	காகினடா, கல்கத்தா	21—
மஹாராஜா	போர்ட்ப்லெர்	28—
மஷோப்ரா	கல்கத்தா	20—
மஹாட்	கல்கத்தா	20—
ஸிம்லா	கல்கத்தா	20—
டான்டோலா	ட்ரீஸ்ட்	23—
ஆக்ரா	கல்கத்தா	20—
க்ளான்மெக்டொகல்	கல்கத்தா	22—
பர்க்கன்பெல்ஸ்	கல்கத்தா	24—
ஸிடி ஆப் வெல்லிங்டன்	கல்கத்தா	மார்ச்சு மாதம் 1—
ஹவில்தார்	ரங்கூன் கல்கத்தா	மார்ச்சு மாதம் 1
ராஜூலா	பினங்கு சிங்கப்பூர்	
மாக்கல்லா	கல்கத்தா	மார்ச்சு மாதம் [illegible]
ஆம்பாய்ஸ்	மார்சேல்	மார்ச்சு மாதம் 3—
மல்பொரா	மார்ஸேல் லண்டன் ஆண்ட்வெர்ப், மிடில்ஸ்பரோ	5—

பொன் வெள்ளி வகையரு.

சவரன் 1-க்கு ரூ. 13-7-[illegible]

சீமை கட்டி வெள்ளி ரூ 59-1[illegible]

திராவிடன் குடி அரசு பத்திரிகைகளை வாங்கி வாசியுங்கள்.

வீரியபந்து

ஒரு மணி நேரத்தில் இளமை

நம்பிக்கையில்லாதாருக்கு நம்பிக்கை

வீரியபந்து போபோன வல்லமையுள்ள இந்திய மூலிகைகளைச் சேர்த்து செய்யப்பட்டது. இழந்துபோன தாது புஷ்டியும் வீரியமும் ஒரே மாத்திரையில் திரும்பக்கிடைக்கும். வெள்ளை, நரம்பு பலவீனம், அஜீரணம், நெஞ்சு படபடப்பு, நபும்சத்துவம், தேகபலவீனம் முதலிய வியாதிகளுக்கு கைகண்ட மருந்து வாலீபர்களுக்கும், வயோதியருக்கும் அருமையான மருந்து. ஒரு புட்டி மருந்தால் பூரண சுகம். விலை ரூ. 3. 3 புட்டிகள் ரூ. 8. நபும்சத்துவத்து மேல் பூசும் எண்ணெய் ரூ. 3. அசோகா பெண்களுக்கு உண்டாகும் மாதவிடாய் சம்பந்தமான வியாதிகளுக்கு சிறந்த மருந்து. 2 புட்டி மருந்தில் பூரண சுகம். 1 புட்டி விலை ரூ. 2. வி. பி. சார்ஜ் வேறு.

(392) அமிர்த ரத்நாகரம், 45, பந்தர் தெரு, சென்னை.

KING OF CHEMICAL DIAMONDS.

செயற்கை வைரங்களில் ராஜா.

1928-ல் புதிதாய் கண்டு பிடிக்கப்பட்டது.

பார்வையிலும், வேலைபாட்டிலும் வைரம்போன்றது.

அதன் குணாதிசயங்கள்.

கட்டிடத்திற்கு கடினமானது, பிரகாசமானது. தீயாலும், அக்னி திராவகத்தாலும் மாற்றமடையாதது. கண்ணாடிகளையும் அறுக்கத்தக்கது. இதர இமிடேஷன் போலி வைரங்களைப் பார்த்து ஏமாறாதீர்கள். ரெடி மேட் நகைகள் கிடைக்கும். சவரன் தங்கத்துக்கு உத்தரவாதம்.

விலை விபரம்:—

கியாரட்டு 13-10 முதல் 15-வரையில் விலை ரூ. 8—0—0.

" 4 முதல் 9 " " ரூ. 6—0—0.

" 1 முதல் 3 " " ரூ. 5—0—0.

" 1 கியாரட்டுக்கு மேற்கொண்ட சைஸ் ரூ. 3—0—0.

கமலா அண்ட் கம்பெனி,

(399 பி) 69, நாராயண முதலி தெருவு, சென்னை.

Printed and [illegible] Kanappa[illegible] at [illegible] Printing Works, Madras.